விலை: 50.00
பக்கங்கள் : 12
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii


E-mail: valampurii@yahoo.com
சங்கு 24
ஒலி 175 வள்ளுவர் ஆண்டு 2054 வைகாசி 29 திங்கட்கிழமை (12.06.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829




## ஊழல், மோசடி சட்டமூலம்

# அரசுக்கு சார்பானதாக உருவாக்கக்கூடாது

### பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன



(கொழும்பு)

அரசாங்கத்தினால் மிகவிரைவில் கொண்டுவரப்படவுள்ள ஊழல், மோசடி சட்டமூலம் அரசுக்குச் சர்பானதாக உருவாக்கக்கூடாது என பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன தெரிவித்துள்ளார்.

(11ஆம் பக்கம் பார்க்க)

### இரண்டு மடங்காகும்
## அதிர்ஷ்டலாப சீட்டுக்களின் விலை

(கொழும்பு)

அதிர்ஷ்ட இலாப சீட்டுக்களின் விலைகளை இரண்டு மடங்குகளால் அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளதாக 11

### ஜனாதிபதி
## லண்டன், பிரான்ஸ் பயணம்

(கொழும்பு)

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 17ஆம் திகதி 11

### உலக டெஸ்ட் சம்பியன்ஷிப்
## அவுஸ்திரேலியா சம்பியன்



11

### கொலம்பியாவில் விமான விபத்து
## 40 நாட்கள் கடந்த நிலையில் 4 குழந்தைகள் உயிருடன் மீட்பு

(பொகொட்டா)

கொலம்பியாவில் விமான விபத்து இடம்பெற்று 40 நாட்கள் கடந்த நிலையில் விபத்தில் சிக்கிய 4 குழந்தைகள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

கொலம்பியாவில் கடந்த மே மாதம் செஸ்னா 206 ரக விமானம், அமேசா 11



## உணவு பாதுகாப்பற்ற நிலையில் இலங்கையில் 75 இலட்சம் மக்கள்

### பேராசிரியர் வசந்த அத்துகோரல

(கொழும்பு)

இந்நாட்டில் சுமார் 75 இலட்சம் மக்கள் உணவு பாதுகாப்பற்ற நிலையை எதிர்கொண்டுள்ளதாக பேராதனைப் பல்கலைக்கழகத்தின் பொருளாதாரம் மற்றும் புள்ளிவிபரவியல் பிரிவின் பேராசிரியர் வசந்த அத்துகோரல தெரிவித்துள்ளார்.

ஐக்கிய நாடுகளின் உணவு மற்றும் விவசாய அமைப்புடன் இணைந்து அண்மையில் நடத்திய ஆய்வில் இந்தத் தகவல் தெரியவந்துள்ளதாக அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

சில மாகாணங்களில் 11

### ஒரு மூடை யூரியா உரத்தை
## ரூ.5 ஆயிரத்துக்கு குறைவான விலையில் வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

அடுத்த பெரும்போகத்திலிருந்து ஒரு மூடை யூரியா உரத்தை 5,000 ரூபாயுக்கும் குறைவான விலையில் விவசாயிகளுக்கு வழங்குவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுப்பதாக விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

திஸ்ஸமஹாராம பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அத்துடன் நாட்டுக்கு 11

## பழைமைவாய்ந்த சிந்தனைகளால் மக்கள் ஆதரவைப் பெற முடியாது

### ஜனாதிபதி ரணில் தெரிவிப்பு



(கொழும்பு)

பழைமை வாய்ந்த சிந்தனைகளுடன் செயற்படுவதால் மக்கள் ஆதரவைப் பெற்றுக்கொள்வதோ தேர்தலில் வெற்றிபெறுவதோ இன்றைய காலகட்டத்தில் சாத்தியமில்லை.

பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்தால்கூட 50 12

## லொறியிலிருந்து தவறி விழுந்த குடும்பஸ்தர் மரணம்

### மாங்காய் பறிக்க முற்பட்டபோது விபரீதம்

(யாழ்ப்பாணம்)

லொறியின் மீது ஏறி மாங்காய் பறிக்க முற்பட்ட குடும்பஸ்தர் ஒருவர் தவறி விழுந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவ்வாறு உயிரிழந்தவர் பிரான்பற்று, பண்டத்தரிப்பைச் சேர்ந்த மூன்று பிள்ளைகளின் தந்தையான வன்னியசிங் 11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஜனாதிபதி தேர்தலில் ரணிலுக்கு ஆதரவு தொடர்பில் முடிவில்லை

## பெரமுன செயலாளர் காரியவசம்

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் தமது கட்சி எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் பொதுச்செயலாளர் சாகர காரியவசம் எம்.பி. தெரிவித்தார்.

மொட்டுக் கட்சி உறுப்பினர் ஒருவரே ஜனாதிபதி தேர்தலில் களமிறங்க வேண்டும் என்பதே கட்சியின் பெரும்பாலான உறுப்பினர்களின் நிலைப்பாடாகும்.

மேலும், தனிப்பட்ட நபர்கள் வெளியிடும் கருத்துகள் கட்சியின் நிலைப்பாடு அல்ல எனவும் சாகர குறிப்பிட்டார்.

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெற வைக்க வேண்டும் என்று மொட்டுக் கட்சி பாராளுமன்ற உறுப்பினரான செஹான் சேமசிங்க விடுத்துள்ள அறிவிப்பு தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மொட்டுக் கட்சி செயலாளர் இவ்வாறு கூறினார்.

அத்துடன், மொட்டுக் கட்சியினர் அமைச்சுப் பதவி கேட்டு அலையப் போவதில்லை என குறிப்பிட்டார்.

எனினும் அமைச்சுப் பதவி கிடைக்காததால் மாவட்ட தலைவர்கள் சிலர் அதிருப்தியில் உள்ளனர் எனவும் சாகர காரியவசம் இதன்போது தெரிவித்தார். (ம-7)

# கிழக்கு மாகாண ஆளுநருக்கு தமிழக முதலமைச்சர் வாழ்த்து

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாண ஆளுநராக நியமிக்கப்பட்டுள்ள செந்தில் தொண்டமானுக்கு தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வாழ்த்து தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாண ஆளுநராக பொறுப்பேற்றுள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமானுக்கு தமிழக முதலமைச்சர் மு.க ஸ்டாலின் தொலைபேசியூடாக தமது வாழ்த்தினை தெரிவித்துள்ளார்.

தமிழக முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்த கிழக்கு மாகாண ஆளுநர் தமிழகத்தின் முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியின் ஆட்சிக் காலத்தில் இலங்கைக்கு பல உதவித் திட்டங்கள் வழங்கப்பட்டதை நினைவு கூர்ந்துள்ளார்.

முன்னாள் முதலமைச்சர் கலைஞர் மு.கருணாநிதியை கௌரவிக்கும் முகமாக நூற்றாண்டு விழாவை இலங்கையில் நடத்துவதற்கான ஏற்பாடுகளை முன்னெடுப்பதாக செந்தில் தொண்டமான், தமிழக முதலமைச்சரிடம் தெரிவித்துள்ளார். (ம-7)

# பகிடிவதை தொடர்பாக அறிக்கை சமர்ப்பிக்குக

## பல்கலைக்கழகங்களுக்கு நீதிமன்றம் உத்தரவு

கடந்த 3 ஆண்டுகளில், பல்கலைக்கழகங்களில் மேற்கொள்ளப்பட்ட பகிடிவதைச் சம்பவங்கள் மற்றும் பதிவான வழக்குகளின் விசாரணைகள் குறித்து தனித்தனியாக அறிக்கை சமர்ப்பிக்குமாறு பல்கலைக்கழகங்கள் மற்றும் பொலிஸ்மா அதிபருக்கு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மாணவர் ஒருவர் சார்பாக தாக்கல் செய்யப்பட்டுள்ள மனு மீதான விசாரணையின் போதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

2020ஆம் ஆண்டில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்காக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விருந்தின்போது, பாரவூர்தி ஒன்றின் டயர் ஒன்றை மாடிப் படியில் இருந்து கீழே உருட்டியதால், மாணவனின் தலை, மண்டை ஓடு, மூளையில் காயம் உள்ளிட்ட பலத்த உடற் காயங்கள் ஏற்பட்டன.

இந்தநிலையில், குறித்த நபர் இதுவரையில், முழுமையாக குணமடையவில்லை என தெரிவிக்கப்படுகிறது.

பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் தலைவர் பேராசிரியர் சம்பத் அமரதுங்க மற்றும் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் பதில் உபவேந்தர் பேராசிரியர் சுதந்த லியனகே ஆகியோரை பிரதிவாதிகளாக பெயரிட்டு குறித்த மாணவனின் சகோதரியால் அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டது.

விசாரணைகளின்போது பகிடிவதை என்பது பல்கலைக்கழக கல்வியில் உடலியல் மற்றும் நடத்தை சார்ந்த விடயங்களில் பாரிய விளைவுகளை ஏற்படுத்தும் ஒரு காரணியாக அடையாளம் காணப்பட்டுள்ளதாக நீதிமன்றம் தெரிவித்திருந்து.

இதன்படி, பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் கீழ் உள்ள சகல அரச பல்கலைக்கழகங்களின் துணைவேந்தர்கள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோரை இந்த வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க நீதிமன்றம் உத்தரவிட்டது.

உயர்கல்வி அமைச்சருக்கு தேசியக் கொள்கைகள் தொடர்பான உத்தரவுகளை வழங்க அதிகாரம் உள்ளதால் அவரையும் பிரதிவாதியாக குறிப்பிடுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

அத்துடன் குறித்த மனு மீதான விசாரணையை எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 29ஆம் திகதி வரை உயர்நீதிமன்றம் ஒத்திவைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-7)


## மரண அறிவித்தல்

### கந்தையா தனபாலசிங்கம்

(முன்னாள் காப்புறுதி அமைப்பாளர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், பிரபல ஜோதிடர்)



மலர்வு 1931.10.18 உதிர்வு 2023.06.11

ஆலங்கட்டை, அல்வாய் வடக்கினைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட அமரர் கந்தையா தனபாலசிங்கம் (முன்னாள் காப்புறுதி அமைப்பாளர் - இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனம், பிரபல ஜோதிடர்) அவர்கள் நேற்று (11.06.2023) இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தையா - பவளம் தம்பதியரின் அன்பு மகனும் கோவிந்தசாமி - அன்னம் தம்பதியரின் பாசமிகு மருமகனும் காலஞ்சென்ற பரமேஸ்வரியின் அன்புக் கணவரும் திருமதி கமலாதேவி நற்குணத்தின் அன்புச் சகோதரனும் தனேஸ்வரன் (ஓய்வுநிலை அதிபர் - மன்/சித்திவிநாயகர் இந்துக் கல்லூரி), சலஜா (சுவிஸ்), சபிதா, சயதா (ஆசிரியை - யா/சென்.தோமஸ் றோ.க.த பெண்கள் பாடசாலை), காலஞ்சென்ற இலங்கேஸ்வரன், ரமேஸ்வரன் (ஆசிரியர் - யா/வல்வை மகளிர் மகா வித்தியாலயம்), சர்வேஸ்வரன் (அமெரிக்கா), தசாயினி ஆகியோரின் அன்புத் தந்தையும் புஸ்பலதா (ஆசிரிய ஆலோசகர், மன்னார்), சிவச்செல்வம் (சுவிஸ்), மகேந்திரம் (மகான் - பாரின்), தேவகி (ஆசிரியை - யா/உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி), நிருஜா (அமெரிக்கா) ஆகியோரின் அன்பு மாமனாரும் சைதன்யன், சமிதன், பைரவி, சகானா, சாலவன், சாதுரியன், மேனஜா, சாத்வீகன், சாதுர்சன், தரணிகா, ஆரபி, ஆதுஜா, அபிஷா, சர்வஜா, சர்மிகா ஆகியோரின் அன்புப் பேரனும் அகராதிரன், நட்சத்திரா ஆகியோரின் பூட்டனும் காலஞ்சென்றவர்களான நற்குணம், சிவபாதபுண்ணியம், விஷ்ணுபாதம் (சிவகவி), அகிலேஸ்வரி, மல்லிகாதேவி, இலட்சுமிதேவி, திரௌபதி மற்றும் தர்மகுலசிங்கம் (சமரக்கொடி -கனடா) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (12.06.2023) திங்கட்கிழமை காலை அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக முற்பகல் 11.00 மணியளவில் சுப்பர்மடம் இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

சசிகை, ஆலங்கட்டை.
அல்வாய் வடக்கு.
தொடர்பு:- 077 615 2326, 077 583 5396

தகவல்:- மா.நவநீதமணி
செ.சிவச்செல்வம்
(மருமகன்)

(15933)

## மரண அறிவித்தல்

தோற்றம் 13 - 05 - 1935



மறைவு 11 - 06 - 2023

### திரு.செல்வரத்தினம் சிவன்தாசன்

( ஓய்வுபெற்ற கணக்காளர் - தபால் திணைக்களம் )

உரும்பிராய் தெற்கை பிறப்பிடமாகவும் கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திரு. செல்வரத்தினம் சிவன்தாசன் அவர்கள் நேற்று (11.06.2023) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்வரத்தினம் - நாகரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான வைத்திலிங்கம் - பாக்கியலட்சுமி தம்பதியரின் மருமகனும் சிவபாக்கியத்தின் அன்புக் கணவரும் Dr.யோகானந் - லக்ஷிதாவின் அன்பு மாமனாரும் காலஞ்சென்றவர்களான சிவன்பாலன், சிவன்நேசன், சிவன்ரூபன் மற்றும் சிவகாமியின் அன்பு சகோதரனும் கலாநிதி அருள்நந்தி, காலஞ்சென்ற சிவானந்தன், தவமணி, காலஞ்சென்ற பத்மராணி, விமலரஞ்சிததேவி, சுந்தரலிங்கம் ஆகியோரின் மைத்துனரும் தவமணிதேவி, சித்ரா ஆகியோரின் சகலனும் Dr.சிவராஜினி, கலாநிதி சிவசொருபி, Dr.சிவன்சுதன், சிவதவானி, சிவானி, சிவாஜினி, சிவாஞ்சன், சிவாஞ்சலி ஆகியோரின் சிறிய தந்தையும் (இளையப்பா), சிவகௌரி, சிவதர்சினி ஆகியோரின் பெரியப்பாவும் கலாநிதி வாசுகி, Dr.வசுமதி, Dr.வானதி, சரவணன், சாம்பவி ஆகியோரின் மாமனாரும் நிவீஷன், தேனுஷன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 12.06.2023 திங்கட்கிழமை பி.ப 3.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன்மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:- Dr.யோகானந்
077 007 9624
(தெல்லிப்பழை ஆதார வைத்தியசாலை)

262, பலாலி வீதி,
கந்தர்மடம்.

(C-6723)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணாமல் போனோருக்கு என்ன நடந்தது?

# உறவுகளிடம் உண்மையை கூறுங்கள்

## சர்வதேச செஞ்சிலுவை சங்கம் வலியுறுத்து

(கொழும்பு)

**காணாமல்போனோரின் குடும்பத்தினர் நீண்டகாலமாக அனுபவித்துவரும் துன்பத்துக்கு உடனடியாகத் தீர்வை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியிடம் வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கைக்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற் கொண்டிருந்த சர்வதேச செஞ்சிலுவை சங்கத்தின் ஆசிய, பசுபிக் பிராந்தியத்துக்கான பணிப்பாளர் கிறிஸ்டின் சிபோல்லா மற்றும் வெளிவிவகார அமைச்சர் அலிசப்ரி ஆகியோருக்கிடையிலான சந்திப்பொன்று கடந்த வார இறுதியில் நடைபெற்றது.

இச்சந்திப்பின்போது இலங்கையில் வாழும் அனைத்துச் சமூகங்களையும் சேர்ந்த காணாமல்போனோரின் குடும்பத்தினர் அனுபவித்துவரும் துன்பத்துக்குத் தீர்வை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

காணமல்போன தமது அன்புக்குரியோருக்கு என்ன நேர்ந்தது என்பதை அறியாமல் அவர்களது குடும்பத்தினர் பெரும் துயரத்தை அனுபவித்துவருவது குறித்து கிறிஸ்டின் சிபோல்லா அமைச்சர் அலிசப்ரியிடம் எடுத்துரைத்தார்.

எனவே காணாமல் போனோருக்கு என்ன நேர்ந்தது, அவர்களின் விதி என்ன என்ற பதிலை அவர்களது குடும்பத்தாருக்குத் தெரியப்படுத்தும் செயன்முறை உடனடியாக ஆரம்பிக்கப்படவேண்டியது அவசியம்.

அத்தோடு இச்செயன்முறைக்கு பக்கச்சார்பற்ற நடுநிலையானதும் சுயாதீனமானதுமான மனிதாபிமானக் கட்டமைப்பு என்ற ரீதியில் செஞ்சிலுவை சங்கத்தினால் வழங்கப்படக்கூடிய ஒத்துழைப்பு தொடர்பாகவும் அவர் இதன்போது பிரஸ்தாபித்தார்.

அதற்குப் பதிலளித்த அமைச்சர் அலி சப்ரி, இது மிகக்கடினமான நீண்ட பயணம் என்று சுட்டிக்காட்டியதுடன், இனங்களுக்கிடையிலான பாலத்தைக் கட்டியெழுப்புவதுடன் கடந்த காலப் பிரச்சினைகளுக்குத் தீர்வை வழங்கும் அதேவேளை அனைத்து இலங்கையர்களும் சுயகௌரவத்துடனும் பாதுகாப்பாகவும் வாழக்கூடிய எதிர்காலத்தை முன்னிறுத்தி செயலாற்றுவோம் என்று தெரிவித்தார்.

மேலும் பல்லினத்தன்மை என்பது ஓர் பலம் என்றும், அது பின்னடைவாக மாறுவதற்கு இடமளிக்க மாட்டோம் என்றும் அவர் குறிப்பிட்டார். (நி)

# அடுத்த மாதம் குறையப்போகும் மின் கட்டணம்

## ஆணைக்குழு வெளியிட்ட குறைப்பு விபரம்

(கொழும்பு)

ஜூலை மாதம் மேற்கொள்ளப்படவுள்ள மின்கட்டண திருத்தத்தின் போது மின்கட்டணம் குறைக்கப்படவுள்ள அளவு தொடர்பில் இலங்கை மின்சார சபை முன்வைத்துள்ள யோசனைகளை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு வெளியிட்டுள்ளது.

அதன்படி, 0 - 30 வரையான மின்சார அலகுகளை பயன்படுத்தும் நுகர்வோருக்கான மின் கட்டணம் 26.9 சதவீதத்தால் குறைக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், 31முதல் 60 வரையான மின்சார அலகுகளை பயன்படுத்தும் நுகர்வோருக்கு 10.8 சதவீதமும் 61 முதல் 90 வரையான அலகுகளுக்கு 7.2 சதவீதமும் கட்டணம் குறைக்கப்பட வேண்டும் என யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

மின்சார சபையின் யோசனைக்கு அமைய, அதிகளவான மக்கள் பயன்படுத்தும் 91 முதல் 180 வரையான அலகுகளுக்கு 3.4 சதவீதம் கட்டணம் குறைக்கப்படும் என குறிப்பிடப்பட்டுள்ளது.

180 அலகுகளுக்கும் அதிகமாக மின்சாரத்தை பயன்படுத்தும் நுகர்வோருக்கான கட்டணத்தை 1.3 சதவீதத்தால் குறைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

அத்துடன், உத்தேச மின் கட்டண திருத்தத்துக்கு அமைய மதஸ்தானங்கள் மற்றும் வழிபாட்டு நிலையங்களுக்கான மின்கட்டணத்தை 3.2 சதவீதத்தால் குறைப்பதற்கு யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது.

எனினும், தொழிற்துறை, பொது அமைப்புகள், வீதி விளக்குகள் மற்றும் அரச நிறுவனங்களுக்கான மின்கட்டணத்தில் திருத்தம் மேற்கொள்ளப்பட மாட்டாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேவேளை, உணவகத் தொழிற்துறைக்கான மின்கட்டணம் 12.6 சதவீதத்தால் குறைக்கப்படும் என இலங்கை மின்சார சபை யோசனை முன்வைத்துள்ளதாக பொது பயன்பாடுகள் ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது. (நி)

# தட்டுப்பாடின்றி எரிபொருளை பெற்றுக்கொள்ளலாம்-காஞ்சன



(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் உள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் தட்டுப்பாடு இன்றி எரிபொருளை பெற்றுக்கொள்ள முடியும் என மின்சாரம் மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தனது டுவிட்டர் கணக்கில் பதிவொன்றை மேற்கொண்டு இதனை தெரிவித்துள்ளார்.

தற்போது நாடளாவிய ரீதியில் உள்ள அனைத்து எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கும் போது மான எரிபொருள் இருப்புக்கள் விநியோகிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் அதில் குறிப்பிட்டுள்ளார்.

அதன்படி, நாளாந்த எரிபொருள் விநியோக நடவடிக்கைகள் வழமை போன்று இடம்பெற்று வருவதாக வும் நாடளாவிய ரீதியில் உள்ள ஒவ்வொரு நிரப்பு நிலையங்களிலும் தட்டுப்பாடு இன்றி எரிபொருளை பெற்றுக் கொள்ள முடியும் எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார். (நி)

# ரணில் அரசாங்கத்தில் அமைச்சுப் பதவி வேண்டாம்

## நாமல் மீண்டும் தெரிவிப்பு

(கொழும்பு)

ரணில் தலைமையிலான அரசாங்கத்தின் கீழ் ஒருபோதும் அமைச்சு பதவிகளையோ, சலுகைகளையோ பெறப்போவதில்லை என பாராளுமன்ற உறுப்பினர் நாமல்ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

தென்னிலங்கை ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் மீண்டும் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி தேர்தலில் யாருக்கு ஆதரவளிப்பது என்பதை தேர்தல் அறிவித்த பின்னர் தீர்மானிக்கப்படும் என்றும் கடந்த ஒரு வருடத்திற்கு முன்னர் ரணில் விக்கிரமசிங்க ஜனாதிபதியாக வருவாரென யாரும் எதிர்பார்க்கவில்லை என்றும் அதே போன்று எதிர்காலத்தில் எதுவும் சாத்தியமாகும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (நி)

# மீண்டும் ஆயுதப் போராட்டம் இடம்பெறலாம்-ஹெக்டர் அப்புகாமி

(கொழும்பு)

இலங்கையில் ஹிட்லர் ஆட்சியே நடைபெற்று வருகிறது. இவ்வாண்டு இனங்களுக்கிடையிலான முறுகல் நிலையும் மோசமாக அதிகரித்துள்ளது.

நாட்டு மக்கள் மீண்டும் ஆயுதம் ஏந்த வேண்டிய சூழல் உருவாகிக்கொண்டிருக்கிறது.

இவ்வாறு, ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புகாமி தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

"காலி முகத்திடல் போராட்டத்தின் மூலம் மக்கள் எதிர்பார்த்த மாற்றம் ஏற்படவில்லை. மாறியது ஜனாதிபதி மட்டுமே.

ஜனாதிபதியாக வந்தவர் மக்களின் கோரிக்கைகளை சரிவர நிறைவேற்றவில்லை. அன்று இருந்த பொருளாதார வீழ்ச்சி இன்றும் காணப்படுகிறது. மாற்றம் எதுவும் பெரிதாக ஏற்படவில்லை.

மக்கள் பாரிய பொருளாதார பிரச்சினைகளுடனேயே குடும்பத்தை நடத்தி வருகின்றனர்.

நாட்டில் உள்ள பிரச்சினைகளுக்கு மக்கள் நீதி கேட்டால் உங்களை கைது செய்வோம் என அரசு அச்சுறுத்தல் விடுவது நியாயமான செயல் இல்லை.

மீண்டும் நாட்டில் சாதி, இன பேதங்கள் உருவாகி வருகிறது. இதன் மூலம் மீண்டும் ஆயுதம் ஏந்த வேண்டிய நிலை உருவாகும்." இவ்வாறு பாராளுமன்ற உறுப்பினர் ஹெக்டர் அப்புகாமி தெரிவித்துள்ளார். (நி)

# டெங்கு நோயாளர்களில் 25 வீதமானவர்கள் மாணவர்கள்

## சுகாதார அமைச்சு தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டில் பதிவாகியுள்ள மொத்த டெங்கு நோயாளர்களில் 25 சத வீதமானவர்கள் பாடசாலை மாணவர்கள் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று ஊடகத்திற்கு வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே இவ்விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் டெங்கு நுளம்பு பரவுவதைத் தடுக்கும் வகையில், பாடசாலை வளாகங்களைச் சுத்தம் செய்யும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படுகிறது.

இந்த ஆண்டின் இது வரையான காலப்பகுதியில் நாட்டில் 42,184 டெங்கு நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

அத்துடன் 61 சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளுக்குட்பட்ட பகுதிகள் டெங்கு அபாயப் பிரதேசங்களாக அடையாளம் காணப்பட்டுள்ளதாகவும் சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி)

# நாட்டை விட்டு வெளியேறும் தொழில் வல்லுநர்கள் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில் 2022 ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைகளுக்காக வெளியேறிய இலங்கையர்களின் எண்ணிக்கை 37 வீதம் அதிகரித்துள்ளதாக வெளி விவகார அமைச்சின் அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

கடந்த 2015 ஆம் ஆண்டு முதல் வருடாந்தம் வெளிநாட்டு வேலைக்குச் சென்றவர்களின் எண்ணிக்கை சராசரியாக 226,000 மாத்திரமாகும். ஆனால் 2022 ஆம் ஆண்டு அந்த எண்ணிக்கை 311000 வரை உயர்ந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வெளிநாட்டு வேலைகளுக்காக வெளியேறியவர்களில் 87 வீதம் பேர் சில தொழில் நிபுணத்துவம் கொண்ட தொழில் வல்லுநர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. (நி)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# கரோலினா முச்சோவாவை வீழ்த்தி மகுடம் சூடினார் இகா ஸ்வியாடெக்



கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற பிரெஞ்சு ஓபன் டென்னிஸில் கரோலினா முச்சோவாவை வீழ்த்தி இகா ஸ்வியா டெக் மகுடம் சூடியுள்ளார்.

22 வயதான போலந்தைச் சேர்ந்த இவர், நேற்று முன்தினம் செக் நாட்டைச் சேர்ந்த கரோலினா முச்சோவாவுக்கு எதிராக 6-2, 5-7, 6-4 என்ற நேர்செட் கணக்கில் வெற்றி பெற்றார்.

போட்டியின் ஆரம்பத்தில் 6-2 ,3-0 என முச்சோவா முன்னிலை வகிக்க, உலக தரவரிசையில் முதல்நிலை வீராங்கனைக்கு சற்று பதற்றத்தை ஏற்படுத்தியிருந்தது.

இருப்பினும் இதனை தொடர்ந்து மீண்டெழுந்த இகா ஸ்வியாடெக், இறுதி மூன்று கேம்களை வெற்றிகொண்டு மகுடம் சூடினார். (ஞி)

# உதைபந்தாட்ட போட்டி

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் லீக் சுற்று கிண்ணப் போட்டியில் இன்று திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்கு சென்மேரிஸ் விளையாட்டு கழகமும் சென்.அன்ரனீஸ் விளையாட்டுக் கழகமும் மோதவுள்ளன.

அரியாலையில் உள்ள யாழ். உதைபந்தாட்ட பயிற்சி நிலையத்தில் குறித்த போட்டி நடைபெறவுள்ளது என ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (ஞி)

# முதல்முறையாக சம்பியன்ஸ் லீக்கை வென்றது மான்செஸ்டர் சிட்டி



இஸ்தான் புல்லில் உள்ள அட்டாடர்க் மைதானத்தில் இன் டர் மிலானை 1-0 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி மான்செஸ்டர் சிட்டி அணி முதன் முறையாக சம்பியன்ஸ் லீக்கை கைப்பற்றியுள்ளது.



மூன்றுமுறை சம்பியன்ஸ் லீக்கை வென்ற இன்டர்மி லானுக்கு எதிரான போட்டியில் ஸ்பானிய ரோட் ரியின் 68 ஆவது நிமிட கோல், மான் செஸ்டர் சிட்டி அணியின் வெற்றியை உறுதி செய்தது. ஐரோப்பிய கால்பந்தின் மிகப்பெரிய கிளப் போட்டியில் மான்செஸ்டர் சிட்டி வெற்றி பெறுவது இதுவே முதல் முறை என்றாலும், பெப்கார்டியோலா பயிற்சியாளராக கிண்ணத்தை வெல்வது இது மூன்றாவது முறையாகும்.

15 ஆண்டுகளில் இரண்டாவது முறையாக, உரிமை யாளர் ஷேக் மன்சூர் பின் சயீத் அல் நஹ்யான், மான் செஸ்டர் சிட்டி மகுடம் சூடும் தருணத்தில் கலந்து கொண்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (ஞி)

## facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2850

விஜயந்தினி




அசீம்




துருபத்




நியாஸ்




தர்மினி




கவிந்தன்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இலங்கை முழுவதும் மரங்களை நடுகை செய்யும் வெளிநாட்டவர்

(கொழும்பு)

இலங்கை முழுவதும் நடந்து சென்று பல்வேறு மரங்களை நடுகை செய்யும் வெளிநாட்டவர் தொடர்பான தகவல் வெளியாகி உள்ளது.

தென்னாபிரிக்காவை சேர்ந்த ஒருவரே உலக நாடுகளை சேர்ந்த பல வகையான மரங்களை தனது தனிப்பட்ட பணத்தில் கொள்வனவு செய்து இந்த மகத்தான பணியை செய்து வருகிறார்.

கொழும்பில் இருந்து தெய்வேந்திர முனை வழியாக கதிர்காமம் வரை நடந்து சென்று அங்கிருந்து கண்டி வழியாக பருத்தித்துறை வரை நடந்து சென்று மரம் நடும் பணியை அவர் மேற்கொண்டு வருகிறார்.

அவரது சொந்த யூடியூப் சேனலில், அவர் பயணம் செய்யும் நாடுகளின் வீடியோக்களை வெளியிடுகிறார். அதில் வரும் பணத்தில் இந்த வெளிநாட்டவர் உலக நாடுகளில் மரம் நடுவதற்கு கொடுத்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (நி)

## காணி பொலிஸ் அதிகாரங்களை வடக்கு- கிழக்கிற்கு வழங்க ரணிலுக்கு அதிகாரமில்லை

### சாகர காரியவசம் விளக்கம்

(கொழும்பு)

இலங்கையில், வடக்கு மற்றும் கிழக்கு மாகாணசபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு ரணில் விக்கிரமசிங்கவிற்கு அனுமதி வழங்கப் போவதில்லை என பொதுஜன பெரமுனவின் செயலாளர் சாகர காரியவசம் சிங்கள ஊடகம் ஒன்றிற்கு தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலின் போது, மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் தமது கட்சியின் நிலைப்பாட்டை விளக்கியதாகவும் சாகர காரியவசம் குறிப்பிட்டுள்ளார்.

மாகாண சபைகளுக்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவது தொடர்பில் தானும், பாராளுமன்ற உறுப்பினர் சரத் வீரசேகரவும் கருத்துக்களை ஜனாதிபதியிடம் முன்வைத்திருந்தாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை மாகாண சபைகளுக்கு இது வரை எந்த அதிகாரமும் வழங்கப்படவில்லை என்றும் வடக்கு, கிழக்கிற்கு காணி மற்றும் பொலிஸ் அதிகாரங்களை வழங்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆணை இல்லை என சரத் வீரசேகர குறிப்பிட்டிருந்ததாக அவர் தெரிவித்திருந்தார்.

அவ்வாறு அதிகாரங்களை அவர் வழங்க வேண்டுமானால் ரணில் புதிய ஆணையை பெற்றுக்கொள்ள வேண்டும் என சரத் வீரசேகர தெரிவித்ததாக அவர் மேலும் தெரிவித்துள்ளார். (நி)

## மின்சாரசபையை தனியார் மயப்படுத்தும் சட்டத்தை வாபஸ் பெற வேண்டும்

### இலங்கை மின்சாரசபை ஊழியர்கள்

(கொழும்பு)

மின்சார சபையை தனியார் மயமாக்கும் சட்டத்தை உடனடியாக வாபஸ் பெற வேண்டும் என இலங்கை மின்சார ஊழியர் சங்கம் தெரிவித்துள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்ட அதன் பொதுச் செயலாளர் ரஞ்சன் ஜெயலால் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மின்சார வாரியத்தை 15 நிறுவனங்களாகப் பிரிக்கும் சட்டமூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. இன்னும் சில தினங்களில் இந்த சட்டமூலம் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என எமக்கு தகவல் கிடைத்துள்ளது.

இந்த முயற்சி முறியடிக்கப்பட வேண்டும். அந்தச் சட்டம் நிறைவேற்றப்பட்டு 6 வாரங்கள் கடந்ததும், ஒக்டோபர் முதலாம் திகதி முதல் இந்த 15 நிறுவனங்களையும் அந்த சட்ட மூலத்தின்படி தான் செயற்பட முடிவு செய்துள்ளதாகவும் எமக்கு தகவல் கிடைத்துள்ளன.

இந்த சட்டத்தின் ஏற்பாடாக இலங்கை மின்சார சபை ஊழியர்களின் ஓய்வூதியத்தை உள்ளடக்குவதில்லை என தீர்மானம் எடுத்துள்ளனர்.

நிறுவனங்களுக்கு மின்வாரியத்தை வழங்கும் சட்டத்தை உடனடியாக திரும்பப் பெற வேண்டும்.

இல்லையேல் 21 ஆம் திகதி மின்சார வாரியத்தின் அனைத்து தொழிற்சங்கங்களும் ஒன்றிணைந்து மின்வாரிய அலுவலகத்தை விட்டு அனைவரும் வெளியேறி விகாரமஹாதேவி பூங்காவில் ஒன்று கூடுவோம் என அவர் தெரிவித்தார். (நி)

## ஆட்கடத்தல் காப்புறுதி மோசடியின் பின்னணியில் சில அரசியல் வாதிகள்

### அம்பலப்படுத்திய அமைச்சர்



(கொழும்பு)

வெளிநாடுகளுக்கு தொழில் நிமிர்த்தம் செல்லுகின்ற தொழிலாளர்களுக்கு சட்ட விரோதமான காப்புறுதி வழங்கப்படுவதுடன் ஆட்கடத்தல்களின் பின்னணியில் இலங்கையிலுள்ள சில அரசியல்வாதிகள் செயற்படுவதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு அமைச்சர் மனுச நாணயக்கார தெரிவித்துள்ளார்.

இதன் பின்னணி தொடர்பாக பல தகவல்கள் வெளியாகியுள்ளதாகவும் குறிப்பாக குவைத் நாட்டில் பணிபுரியும் பெருமளவிலான இலங்கைத் தொழிலாளர்கள் இந்தக் கடத்தலில் சிக்கியுள்ளதாகவும் அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இதனை தடுக்கும் வகையில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் பதிவு செய்து, வெளிநாடு செல்லும் தொழிலாளர்களுக்கு காப்புறுதி முறையை அரசாங்கம் அறிமுகப்படுத்தியுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

எந்தவொரு வெளி நாட்டிற்கும் தொழிலாளியாக செல்லும் போது அந்த காப்புறுதியின் மூலம் காப்புறுதித் தொகையை பெற்றுக் கொள்ள முடியும்.

இதேவேளை இலங்கையிலுள்ள காப்புறுதி அமைப்பில் இதுவரை 3ஆயிரத்து 731 தொழிலாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். (நி)

## இராசிபலன்

12.06.2023
வைகாசி 29, திங்கட்கிழமை
நவமி பிற்பகல் 1.57 மணிவரை
உத்தரட்டாதி பிற்பகல் 5.12 மணிவரை

சுபநேரம் -11.52-1.22 மணிவரை
இராகுகாலம்-7.22-8.52 மணிவரை

சந்திராஷ்டமம்- மகம், பூரம்

வளவன்

**மேஷம்**: தொழில் நலன்கருதிய பயணங்கள் இடம் பெறலாம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், குடும்பத்திற்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழ்வீர்கள்.

**கடகம்**: உடல் நலன் சீராகும், தடைப்பட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பூர்வீகச் சொத்து சம்பந்தப்பட்ட வகையில் ஆதாயமுண்டு, பயணங்கள் கைகூடும்.

**துலாம்**: மறைமுக எதிர்ப்புகள் மாறும், செய் தொழிலை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும், சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.

**மகரம்**: பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், குடும்பத்தில் சுகங்களும் சந்தோசங்களும் அதிகரிக்கும் , வழிபாடு சிறப்பினைத்தரும், போசன சுகமுண்டு.

**ரிஷபம்**: தொலைபேசி வழியில் மகிழ்ச்சி தரும் செய்திகள் வந்து சேரலாம், பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், இல்லத்தில் இனிய சம்பவங்கள் நடைபெறும் வாய்ப்புண்டு.

**சிம்மம்**: சில பிரச்சினைகளை கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களை பாதியில் விட்டுவிடுவீர்கள்.

**விருச்சிகம்**: எதிர்கால நலன்கருதி எடுத்த முயற்சிகளுக்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்யும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்**: குடும்பத்தினர் பெருமைப்படும் வகையில் சில நிகழ்வுகள் நடைபெறலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, நன்மைகள் நடைபெறும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்**: அரசு வழியில் அனுகூலமுண்டு, உங்கள் திறமைகள் வெளிப்படும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள்.


**கன்னி**: தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், வழிபாட்டால் முன்னேற்றம் காண வேண்டிய நாள், கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**தனுசு**: திட்டமிட்ட காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், பெற்றோர் மீது பிரியம் கூடும், புதிய சிந்தனைகள் தோன்றும் வாய்ப்புண்டு, பயணங்களால் பலனுண்டு.

**மீனம்**: வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், நிதானத்தோடு செயற்பட வேண்டிய நாள், வழிபாட்டால் திருப்தி காண வேண்டிய நாள், சிந்தனை மிகுதியான நாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வயது ஆக ஆக அறிவும் பெருகும் மடமையும் பெருகும்.





யாழ்ப்பாண இராச்சியத்தை ஆட்சி செய்த கடைசி தமிழ் மன்னனான 2 ஆம் சங்கிலிய மன்னனின் 404 ஆவது நினைவு தினம் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்.நல்லூர் முத்திரைச் சந்தியில் உள்ள சங்கிலி மன்னன் சிலைக்கு மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தி நினைவு கூரப்பட்டது. இந்நிகழ்வில் மதத்தலைவர்கள், கலாநிதி ஆறு.திருமுருகன், பேராசிரியர் ப.புஷ்பரட்ணம் உள்ளிட்ட பலரும் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர். (படங்கள்- சிவசாந்தன்)

# கப்பலேந்தி மாதா ஆலய கதவு உடைத்து திருட்டு

(மன்னார்)

மன்னார் கரிசல் கிராமத்தில் அமைந்துள்ள கப்பலேந்தி மாதா ஆலயத்தில் கதவுகள் உடைத்து உண்டியல், நற்கருணை கிண்ணம் உட்பட பல பொருட்கள் திருடப்பட்டுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவம் இனந்தெரியாத விஷமிகளால் கடந்த வெள்ளிக்கிழமை இரவு இடம் பெற்றுள்ளதாக ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பாக மன்னார் பொலிஸ் நிலையத்தில் ஆலய நிர்வாகத்தினரால் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் நேற்று முன்தினம் வவுனியா தடயவியல் பொலிஸார் சம்பவ இடத்திற்கு வருகை தந்து விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

குறித்த திருட்டு சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை மன்னார் பொலிஸார் முன்னெடுத்துள்ளனர். (நி-285)

# பண்ணை பகுதியை சுத்தப்படுத்திய பொலிஸார்



(அராலி)

யாழ்ப்பாண மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபரின் ஏற்பாட்டில் யாழ். பண்ணை பகுதியினை சுத்தப்படுத்தும் வேலைத்திட்டம் பொலிஸாரால் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

குறித்த பகுதியில் காணப்பட்ட பிளாஸ்டிக் மற்றும் பொலித்தீன் கழிவுகள் பொலிஸ் உத்தியோகத்தர்களால் சேகரிக்கப்பட்டு யாழ். மாநகர சபையின் சுகாதார ஊழியர்களின் உதவியுடன் அகற்றப்பட்டது.

யாழ்.மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர், யாழ்ப்பாண பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி மற்றும் யாழ்ப்பாண பொலிஸ் நிலைய உயர் அதிகாரிகள் உட்பட நூற்றுக்கும் மேற்பட்ட பொலிஸார் கலந்து கொண்டு சுத்தப்படுத்தும் நடவடிக்கையினை முன்னெடுத்தனர். (நி-104)

# 'கள்' விற்பனை நிலையத்தை இடமாற்றக்கோரி போராட்டம்



(மன்னார்)

மன்னார் மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வேட்டையா முறிப்பு கிராமத்தில் அமைந்துள்ள "கள்" விற்பனை நிலையத்தை இடமாற்ற கோரி மக்கள் நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த பகுதியில் உள்ள கள் விற்பனை நிலையத்தை அகற்றி வேறு ஒரு இடத்தில் அமைக்குமாறும் இதனால் பாரிய பிரச்சினை ஏற்படுவதாகவும், குடும்பங்களுக்குள் பிரச்சனைகள், சமூக சீர்கேடு, சிறுவர்கள் மதுபோதைக்கு அடிமையாகுவதாகவும் இதை கருத்தில் கொண்டு உரிய அதிகாரிகள் விற்பனை நிலையத்தை இப்பிரதேசத்தில் இருந்து வேறு இடத்திற்கு இடமாற்றம் செய்யக்கோரி குறித்த போராட்டத்தை முன்னெடுத்தனர்.

சம்பவ இடத்திற்கு வருகை தந்த அடம்பன் பொலிஸார் உடனடியாக அடம்பன் பனை தென்னை வள அபிவிருத்தி கூட்டுறவு சங்க முகாமையாளரை தொடர்பு கொண்டு சம்பவ இடத்திற்கு வருகை தருமாறு கூறியதை அடுத்து சம்பவ இடத்திற்கு வருகை தந்த முகாமையாளர் மக்களின் பிரச்சனைகளை கேட்டறிந்ததோடு,நேற்று முதல்கள் விற்பனை நிலையம் மூடுவதாகவும் தெரிவித்தார். (நி-6-285)

# எச்.ஐ.வி தொற்றுடன்
## வவுனியாவில் இருவர் அடையாளம்

(குருமன்காடு)

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த இருவர் வவுனியாவில் எச்.ஐ.வி தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

வெளிநாட்டில் இருந்து வருகை தந்த நிலையில் மேற்கொள்ளப்பட்ட பரிசோதனையில் இருவர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

இவ்வாறு இனங்காணப்பட்ட இருவரும் ஆண்களாவர். தற்போது அடையாளம் காணப்பட்டவர்களுக்கும் அதற்கான சிகிச்சைகள் வவுனியா மாவட்ட எச். ஐ.வி சிகிச்சைப் பிரிவில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (நி-6-250)

# கஜமுத்துவுடன் இருவர் கைது

(குருமன்காடு)

வவுனியா நகரில் நேற்று முன்தினம் முன்னெடுக்கப்பட்ட திடீர் சோதனையின் போது கஜமுத்து ஒன்று கைப்பற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மாங்குளம் விசேட அதிரடி படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையிலேயே இந்த திடீர் சோதனை மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன்போது கார் ஒன்று சோதனைக்கு உட்படுத்தப்பட்ட போது அதில் விற்பனைச் செய்வதற்கு தயாரான நிலையில் வைக்கப்பட்டிருந்த கஜமுத்து மீட்கப்பட்டது.

இதனையடுத்து காரில் இருந்த 26 மற்றும் 23 வயதுடைய தைச் சேர்ந்த இருவர் கைது செய்யப்பட்டனர். இவர்கள் தெஹியந்தர, ஹக்மன பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் ஆவர்.

மேலதிக விசாரணைகளுக்காக இவ்விருவரும் வவுனியா வனஜீவராசிகள் பாதுகாப்பு அலுவலகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் மேலும் தெரிவித்தனர். (நி-250)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 150 | 160 | 240 |
| உருளைக்கிழங்கு | 180 | 180 | 180 | 200 |
| பச்சைமிளகாய் | 300 | 300 | 300 | 450 |
| தக்காளி | 260 | 300 | 300 | 400 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 220 | 200 | 240 |
| கோவா | 350 | 360 | 400 | 400 |
| கரட் | 360 | 380 | 380 | 450 |
| பூசணி | 80 | 80 | 80 | 100 |
| புடோல் | 150 | 180 | 200 | 320 |
| வாழைக்காய் | 100 | 120 | 80 | 100 |
| சின்ன வெங்காயம் | 400 | 250 | 350-400 | 450 |
| பெரிய வெங்காயம் | 130 | 120 | 130 | 150 |
| பாகற்காய் | 450 | 450 | 500 | 600 |
| வெண்டக்காய் | 150 | 160 | 140 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 220 | 180 | 200 |
| பயற்றங்காய் | 500 | 400 | 300 | 320 |
| லீக்ஸ் | 320 | 360 | 380 | 450 |
| பீற்றூட் | 450 | 400 | 480 | 600 |
| கறிமிளகாய் | 380 | 400 | 480 | 400 |
| முருங்கைக்காய் | 1000 | 1800 | 1800 | 2000 |
| போஞ்சி | 550 | 450 | 480 | 500 |
| கத்தரிதம்புள்ள | 180 | 80 | 200 | 200 |
| கீரை - 1 பிடி | 100 | 60 | 80 | 100 |
| தேசிக்காய் | 350 | 300 | 350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 80 | 80 | 70-100 |
| இராசவள்ளி | 300 | 260 | 250 | 300 |
| வெங்காயப்பூ | 450 | 400 | 600 | 800 |
| முள்ளங்கி | 200 | 180 | 200 | 250 |
| பொன்னாங்காணி | 80 | 80 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 180 | 50 | 50 |
| ஈரப்பலா | 100 | 200 | — | 200 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாரம் ஒரு யாழ்ப்பாணத்து மூலிகை

## வட மாகாண பருவகால பழங்களும் மருத்துவ பண்புகளும்



டாக்டர் (திருமதி) விவியன் சத்தியசீலன்
M.D(Siddha)India
சிரேஷ்ட விரிவுரையாளர்
சித்தமருத்துவத்துறை
யாழ்.பல்கலைக்கழகம்

ஒருவரின் ஆரோக்கியத்துக் குரியதான அளவில் சக்தியளித்தல், உடலை வளர்த்தல், பேணுதல், பாதுகாப்பளித்தல் முதலான அம்சங்களை சரிவர அளிக்கும் உணவையே "நிறை உணவு என்போம். இவற்றுள் சக்தியை கொடுக்கும் உணவுகள் உடலை வளர்க்கும் அல்லது பேணும் உணவுகள், பாதுகாப்பளிக்கும் உணவுகள் இம் மூன்று கூறுகளும் அடங்கி இருத்தல் அவசியமாகும். இவற்றுள் பழங்களும் பழங்களின் வற்றல்களும் பாதுகாப்பளிக்கும் உணவுகளுள் அடங்குகின்றன. நாம்எடுக்கும்உணவுகள் 7கூறுகளில்அடங்குகின்றன.

தானியங்கள், பருப்பு வகைகள் இலைக்கீரைகள், காய் கறிவகைகள், மாமிச உணவுகள், பாலும் பாற்பொருட்களும், பழங்கள் முதலியவையாகும். உள்ளூர் வளத்தை பயன்படுத்தி தினம் ஏதாவது ஒரு பழத்தை (ஒரு வகையினை) சேர்த்தல் அவசியமாகும். பழங்களில் கனியுப்புக்கள், உயிர்ச்சத்துக்கள், நார்ப்பொருட்கள், நீர்ச்சத்து என்பன நிறைய உண்டு. எனவே தினம்ஒரு வகை பழத்தைச் சேர்தல் அவசியம் என்பதை கருத்தில் கொள்வோம்.

"பிணி எனப்படுவது சார்பின் பிறிது ஆய் இயற்கையின் திரிந்து, உடம்பு இடும்பை புரிதல்" அதாவது இயற்கையின் படைப்பே உயிரும் உடலும். இயற்கைக்கு ஒவ்வாத உணவுப்பழக்கங்கள், தீய நடத்தைகள் காரணமாக உடலை நோய் பற்றிக்கொள்கிறது.

எமது பிரதேசத்திற்கு சீத உஷ்ணத்திற்கு ஏற்ற பழங்களாக வெள்ளரி, எலுமிச்சை, நாரத்தை, தோடை, பப்பாளி,வாழை,கொய்யா, பலாப்பழம்,உலுவிந்தை, வில்வம் பழம், விளாம்பழம், குமழிப் பழம், மாதுளம்பழம், அழிஞ்சில் பழம், அன்னாசி, மாம்பழம், பனம் பழம், தக்காளி, திராட்சைப் பழம் அன்னமுன்னா, நெல்லிக் கனி, வீரைப்பழம், சூரைப்பழம், இலந்தைப் பழம், சப்போட்டா அல்லது சீமை இலுப்பை, நாக தாளிப்பழம், முரலிப்பழம் என்பவற்றை குறிப்பிடலாம்.

இப்பழங்களும் நாகதாளிப் பழம், வீரை, சூரைப்பழங்கள், பனம்பழம், இலந்தைப்பழம்ஆகிய வற்றின் பாவனை எமது மக்களிடையே மிகவும் அருகி வருவதை அவதானிக்கலாம். அதேபோல உலுவிந்தை, நாக தாளிப்பழம் போன்ற பழங்களின் மருத்துவப் பண்புகள் பற்றிய விழிப்புணர்வு மக்கள் மத்தியில் குறைவாக இருப்பதும் காணக்கூடியதாக உள்ளது.

### 1.நாகதாளி - Opuntia stricta

இதனை சப்பாத்திக்கள்ளி எனவும் கூறுவர். இதன் பழம் மிகவும் சுவையனாது. இப்பழத்தில் உள்ள தொண்டை முள் நீக்கிய பின்பே பயன்படுத்த வேண்டும்.

நாகதாளிப் பழத்தில் அன்ரி ஒக்ஸ்சிடன் தன்மை இருப்பதாக நவீன ஆய்வுகள் எடுத்துக்கூறுகின்றன. ஆனால் சித்த மருத்துவத்தில் ஏற்கனவே குடற்புற்று நோய் வராமலும் குடற் புண்ணிற்கும் மலச்சிக்கலை நீக்கவும் இருமல், குக்கல் நோய் போன்றவற்றுக்குமாக அன்று தொட்டே பயன்படுத்தப்பட்டு வருகிறது. இதில் உயிர்ச்சத்து C, மக்னீசியம், கல்சியம், பொட்டாசியம் போன்ற உயிர்ச்சத்துக்களும் கனியுப்புக்களும் காணப்படுகிறது. இரத்த ஓட்டத்தை சீர் படுத்தி அதி உயர் குருதி அமு க்கத்தை சீராக்கவும் இப்பழம் உகந்தது.

உடல் உஷ்ணத்தை சீராக்கக் கூடியது. குழந்தைகளும் விரும்பிச் சாப்பிட கூடியது. சுவையைக் கொண்டது. சித்தமருத்துவத்தில் நாகதாளி பழப் பாவனை முக்கியமாக வலியுறுத்தப்பட்டுள்ளது. இது கள்ளி இனத் தாவரமாகும். மலட்டுத்தன்மையை நீக்கவும் இப்பழம் பயன்படுத்த படுகிறது. எமது பிரதேசத்தில் எளிதில் வளர கூடியது. இப் பழத்தை பயன்படுத்த முன்பு இதில் முட்கள் இருப்பதால் தரையில் தேய்த்து முட்களை நீக்கிய பின்பு பயன்படுத்த வேண்டும்.

### 2.உலுவிந்தை

இப்பழமானதுஎமதுவடமாகாண காடுகளில் கார்த்திகை, மார்கழி, மாதங்களில் நிறைய பெறக்கூடியதாக இருக்கும். இப் பழங்களில் உயிர்ச்சத்து C, உயிரச்சத்து A என்பன அதிகளவில் காணப்படும். நார்ச்சத்தும் இருப்பதால் நீரிழிவு நோயாளிகளும் பயன்படுத்தலாம். பழங்கள் நிறைய கிடைக்கும் போது பழங்களை வற்றலாக்கி, பாணி தயரித்து பயன்படுத்தலாம். தோல் மிருதுவாகவும் தோல் நோய்கள் வராமல் இருப்பதற்கும் இப்பழங்களை தாரளமாகச் சாப்பிடலாம்

### 3.சூரைப்பழம்- ziziphus oenoplia

எமது வடமாகாண காடுகள், புதர்களில் சாதாரணமாக வளர கூடியது. மிகவும் சுவையான பழமாகும். பழங்கள் கருமை கலந்த ஊதா நிறமாகும். இதன் பழங்களில் பொட்டாசியம், கல்சியம், பொஸ்பரஸ், இரும்புச்சத்து, உயிர்ச்சத்து C, உயிர்ச்சத்து A, உயிர்ச்சத்து B என்பன காணப்படும். பல்லீறுகளில் இரத்தம் கசிதலுக்கும் சிறந்த பழமாகும். உடல் உஷ்ணத்தை தடுத்து இரதத்தை விருத்தி செய்ய கூடியது. சூரைப் பழங்களை சாப்பிட்டு வர வாய்ப்புண் போன்றன குணமாகும்.

### 4.பலாப்பழம்- Manikara Hexandara

உயிர்ச்சத்து A, E அதிகள வில் காணப்படும். மிகவும் சுவை யான பழம். சித்த மருத்துவத் தில் இதன் பழங்களை பால் நீக்கி பயன்படுத்தின் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கும்.

அத்துடன் உடலுக்கு ஊட்டச் சத்தை கெடுப்பதற்காக பழங்களை வற்றலாக்கி, பாணியாக்கி இயற்கைப்பாணியாக பாணிற்கு பூசி பயன்படுத்தலாம். பழங்களை வைகாசி, ஆனி மாதங்களில் பெறக்கடியதாக இருக்கும். இதன் பட்டைகள் முறிவு நெறிவிற்கு முக்கிய் மூலிகையாக பயன்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கதாகும்.

### 5.அழிஞ்சில் பழம் - Alangium Salbifolium

ஆவணி மாதங்களில் இப் பழங்களை பெறலாம். இதில் உயிர்ச்சத்து C, கல்சியம், பொஸ்பரஸ், நீர்ச்சத்து ஆகியன போதியளவு காணப்படுகிறது. இந்த இனத்தில் ஓரழிஞ்சில் மூலிகை காய கற்ப மூலிகையாகும். இந்த இன பழங்கள் முதுமையை [illegible]க்க கூடியது. பழங்கள் கிடைக்கும் காலங்களில் தாரளமாக பயன்படுத்தலாம். எம் பிரதேசங்களில் நன்றாக வளர்ந்து காணப்படும் மரமாகும். ஓரழிஞ்சில் மிக அரிதாக காடுகளில் வளரக் கூடியது.

### 6. பனம்பழம் Borassus Flabellifer

பழத்தின் நாரில் உள்ள குழம்பைச் சப்பி மென்று சாறை மட்டும் தான் கிரகித்துச் சாப்பிட முடியும். இதனை பச்சையாகவும் சுட்டும் அவித்தும் பயன்படுத்தலாம். புளிக்காத பனஞ்சாற்றை காலையில் அருந்த சக்தி அதிகரிக்கும். சிறுநீர் கூடுதலாக கழியும். ஆரோக்கியத்தை கொடுக்கும்.

மலச்சிக்கல், கிரந்தி ஆகியவற்றுக்கு நன்மை தரும். பனஞ் சாற்றை தேமலுக்கு தடவலாம். பனம் பழச்சாறு உட் சூட்டை தணிக்கும். வயிற்றுப்புண், தொண்டை தாபிரத்திற்கும் சிறந்ததாகும். பெண்களுக்கு ஏற்படும் வெள்ளை சாய்தல் நோய்க்கும் சிறந்தது.

100 கிராம் பனம் பழத்திலுள்ள சத்துக்கள்

புரதம் 2.8 கிராம், கொழுப்பு 1 கிராம், கல்சியம் 86 மில்லிக் கிராம், பொஸ்பரஸ் 90 மில்லிக் கிராம், இரும்பு 2.2 மில்லிக் கிராம், நார்ச்சத்து 0.5 கிராம், ஈரலிப்பு-79 கிராம்.

முடியுமானவரை பழங்களை உடனுக்ககுடன் சேகரித்து சாப்பிட வேண்டும். வட மாகாண பிரதேச மக்களிடையே பெரும்பாலும் எமது பிரதேசத்திலுள்ள காடுகளிலும் புதர்க் காடுகளிலும் உள்ள பழங்களை காட்டிலும் வேறு பிரதேச, வேறு நாடுகளிலிருந்து வரப்படும் பழங்களின் பாவனை ஒப்பீட்டளவில் அதிகமாக இருப்பதை அவதானிக்க கூடியதாக உள்ளது. எமது பிரதேச பழங்கள் எம் சீதோஷ்ண நிலைக்கேற்ப உடலுக்கு ஏற்ப இருப்புதுடன் போசனைக் கூறுகளும் நுண் ஊட்ட சத்துகளும் அதிகமாக காணப்படுகிறது. எனவே, எம் பிரதேச பழங்களான நாகதாளிப் பழம், வீரைப்பழம், சூரைப் பழம், உலுவிந்தைப்பழம், அழிஞ்சில் பழம் போன்றவற்றின் பாவனையை அதிகரிக்க வேண்டும்.

நாம் ஆரோக்கியமாக வாழ்வதற்கு சரிவிகித உணவு அத்தியாவசியமாகும். இதில் பாதுகாப்பு அளிக்கும் உணவு முக்கியமாகும். இதில் பழங்களும் முக்கிய இடம் வகிக்கின்றது. உலர்வலய கனிகளும் உலக வணிகத்தில் 'முக்கிய இடமுள்ளது. ஏனெனில் உலர் வலய கனிகளில் நுண் போசனை கூறுகள் அதிகமாகும்.

### 7.முரலிப்பழம்-B.N Dimocarpus Longon Family - Sapid aceae

உடலின் நோயெதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடலிற்கு பலத்தை கொடுக்க கூடியது. இதில் இரும்புச்சத்து கூடுதலாக இருப்பதால் இரத்தசோகை வராமல் தடுக்க கூடியது. மற்றும் உயிர்ச்சத்து C அதிகளவில் காணப்பட கூடிய பழமாகும். குறைந்த கலோரி கார்போவைத ரேற்று, கொழுப்பு 0 விதம்(இல்லை) வடமாகாண காடுகளில் வளர கூடிய மரமாகும். ஆனால் பல வருடங்களுக்கு ஒரு [illegible] [illegible] இப்பழத் தில் antioxidants செய்கை இருப்பதால் அதாவது புற்று நோய்கள் வருவதை தடுக்கும் ஆற்றல் கொண்டவையாகும். உடன் பழங்களாக பயன்படுத்தினால் பலன்களை கூடுதலாக பெறலாம். இப்பழங்கள் இரத்த ஓட்டத்தை சீராக்கக்கூடியதாகும்.

### 8.வில்வம் பழம்-Agle Marmetas

வில்வம்பழம் கடைகளில் விற்கப்படுவதில்லை. ஆனால் எமது பிரதேசத்தில் தாராளமாக வளரகூடியது. எனவே வில்வ மரம்உள்ள இடங்களுக்குச்சென்று தாராளமாகப் பெற முடியும்.

வயிற்றுப்புண்ணிற்கும் கசரோகத்திற்கும் சிறந்த பழம் என சித்தமருத்துவம் கூறுகிறது. வில்வம்பழத்தின் சதைப்பாக த்தை தேவையான சர்க்கரை சேர்ந்து பிசைந்து காலையில் சாப்பிட வயிற்றுப்புண் ஆறும்.

உடலுக்கு குளிர்ச்சியையும் கொடுக்கும். நீரிழிவு நோயாளிகளும் முக்கால்பதம் பழுத்த வில்வம் பழங்களை உடைத்து கயருடன் கூடிய சதைப்பகுதியை பனைவெல்லம் சிறிதளவு சேர்த்து பிசைந்து சாப்பிடலாம். உட லுக்கு வலுவையும் கொடுக்கும்.

100 கிராம் வில்வம் பழத்தில் உள்ள சத்துக்கள்

புரதம்-18கிராம், கொழுப்பு-0.3 கிராம், காபோவைதரேற்று 31.8கிராம், கல்சியம் 85 மில்லி கிராம், பொஸ்பரஸ்- 50 மில்லி கிராம், இரும்பு 0.6 மில்லி கிராம், உயிர்ச்சத்து C- 8 மில்லி கிராம், நார்ச் சத்து-2.9 கிராம்.

### 9.விளாம்பழம்-Feronia elephantum

இதனுடைய பழ ஓட்டை நீக்கி பழத்தை மட்டும் சாப்பிட்டுவர வாயிநீருதல், தொண்டைப்புண் நீங்கி நல்ல பசி உண்டாகும். பழத்தை சர்க்கரை அல்லது பனைவெல்லம் சேர்த்து சாப்பிட்டு வர நல்ல பலன் கிடைக்கும்.

### 10. மாதுளம் பழம்- Punica granatum

நன்றாக பழுத்த மாதுளம் பழ முத்துக்களை எடுத்து ஒரு பாத்திரத்தில் போட்டு சுத்தமான கையால் பிசைந்து விதைகளை நீக்கி அந்த சாறு அளவில் நான்கிலொரு பங்கு பனைவெல்லம்சேர்த்து சாப்பிட கை, கால் எரிவு, உடல் உஷ்ணம் நீங்கி உடலுக்கு பலத்தைக் கொடுக்கும்.

இந்த சாறு 1 மேசைக்கர ண்டி, சுத்தமான தேன் 1 தேக் கரண்டி கலந்து காலை ஆகாரத்தின் பின் தொடர்ந்து 21 நாட்கள் சாப்பிட்டு வந்தால் மலம் இளகி வெளியேறும். உடலில் புதிய இரத்தம் உற்பத்தியாகும். உடலிற்கு தேவையான சக்தியை கொடுக்கும். நன்றாக முற்றிய மாதுளம்பழத்தின் முத்துக்களை தேனில் ஊற வைத்து சாப்பிட அஜீரண கோளாறு நீங்கும்.

100 கிராம மாதுளம் பழத்திலுள்ள சத்துக்கள்:

புரதம் 1.6 கிராம், காபோவைதரேற்று 14.5 கிராம், கல்சியம் 10 மில்லிகிராம் பொஸ் பரஸ் 70 மில்லிகிராம், இரும்பு 0.3 மில்லி கிராம் றைபோ பிளேவின் 100 ம்மைக்ரோகிராம் உயிர்ச்சத்து C 16 மில்லி கிராம், தயமின் 60 மைக் கிராம், நார்ச்சத்து 5.1 கிராம் , ஈரலிப்பு 78 கிராம்.

### 11.வாழைப்பழம்

வாழைப்பழங்கள் பல வகைகளாக இருந்தாலும் செவ் வாழைப்பழமானது, பல வியாதிகளை குணப்படுத்தக் கூடியது. பொதுவாக மலட்டுத்தன் மையை நீக்கக் கூடியது. இதற்கு ஒரு பழத்தை துண்டு துண்டாக வெட்டி தேனில் ஊற வைத்து சாப்பிட்டு வர வேண்டும். இவ்வாறு தொடர்ந்து 48 நாட்கள் சாப்பிட்டுவர வேண்டும். உணவு நன்கு ஜீரணமாகி மலச்சிக்கலை தவிர்க்க மலை வாழைப்பழம் சிறந்ததாகும். வாழைப்பழமும் பாலும் இரவில் உண்ண அஜீரணம் சரியாகும். காச நோய் உள்ளவர்கள் வாழைப்பழத்துடன் தேனும் இளநீரும் கலந்து சாப்பிட காச நோய் குறி குணங்கள் தணிவடையும். வாழைப்பழத்துடன் சிறிது தேன்கலந்து சாப்பிட வெப்ப காலத்திற்கு சிறந்த துணை ஆகாரமாகும்.

100 கிராம் வாழைப்பழத்திலுள்ள சத்துக்கள்:

புரதம்1.2 கிராம்கொழுப்பு 0.3 கிராம், காபோவைதரேற்று 27.2 கிராம், கல்சியம் 17 மில்லி கிராம், பொஸ்பரஸ் 36 மில்லி கிராம், இரும்பு 0.9 மில்லி கிராம், கரோட்டின்78 மைக்கிராம். தயமின் 50 மைக் கிராம், றைபோ பிளேவின் 80 மைக்கிராம், உயிர்ச்சத்து C - 7 மில்லி கிராம், நார்ச்சத்து-0.4 கிராம், ஈரலிப்பு 70.1 கிராம்.

### பப்பாளிப்பழம்

பப்பாளிப்பழம் நீண்ட சத்துக்களைக் கொண்டது. மலத்தை இழக்கி நன்கு வெளியேற்றி மலச்சிக்கலை நீக்கும். இரத்தத்தை சுத்தி செய்து விருத்தி செய்யும். தினமும் நன்கு பழு த்த பப் பாளித் துண் டொன் றை சாப்பிட்டு வருவதால் நோய் எதிர்ப்புத் தன்மை அதிகரிக்கும்.

பப்பாசிப்பழத்தை தேனில் உறவைத்துச் சாப்பிடும் போது உணவுக் கால்வாய்த் தொகுதியை சீராக இயக்க வைப்பதுடன் குடலின் பலத்தையும் இலகுவாக்கி அசைவ உணவுகளையும் இலகுவில் ஜீரணமடைய வைக்கக்கூடியது.

100 கிராம் பப்பாளிப் பழத்திலுள்ள சத்துக்கள்:

புரதம்0.6 கிராம், கொழுப்பு 0.1 கிராம், காபோவைதரேற்று 7.2 கிராம், கல்சியம் 17 மில்லி கிராம், பொஸ்பரஸ் 13 மில்லி கிராம், கரோட்டின் 666 மைக்கிராம், றைபோ பிளேவின் 250 மைக் கிராம் உயிர்ச்சத்து C -57 மில்லி கிராம்.

எப்போதும் பழங்களை உடனுக்குடன் சேகரித்து சாப்பிட்டால் தான் அதிலுள்ள நுண் போசனைக் கூறுகள் முற்றிலுமாக கிடைக்கும். மஞ்சள் நிற பழங்களில் உயிர்ச்சத்து A, இரும்புச்சத்து ஏனைய விற்றமின்கள், தாதுப்பொருட்கள் கூடுதலாக உள்ளது குறிப்பிட வேண்டிய விடயமாகும். மற்றைய உணவுகளுடன் பழங்களையும் சேர்த்து உண்ணும் போதுதான் அவை நிறை உணவாக அமைந்து விடுகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 1

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 202





பாடலின் பின் பகுதியைக் கவனமாகக் கேட்டு வந்த குந்தவை, பாட்டல் முடிந்ததும், "நல்ல கண்ணன் இந்தச் செந்தமிழ் நாட்டுக்குத் தெய்வமாக வந்து வாய்த்தான்! வெண்ணெய் உண்டு வேய்ங்குழல் ஊதிப் பெண்களுடன் காலங் கழித்துக் கொண்டிருந்தால் மற்ற காரியங்களெல்லாம் என்ன ஆவது?". என்றாள்.

மறுமொழி சொல்லாமலிருந்த வானதியைப் பார்த்து, "என்னடி மௌனம் சாதிக்கிறாய்? நீயும் கண்ணன் குழலில் மயங்கிவிட்டாயா, என்ன?" என்று கேட்டாள். "அக்கா! என்ன கேட்டீர்கள்?" என்றாள் வானதி. "என்ன கேட்டேனா? உன் கவனம் எங்கே சென்றிருந்தது?"

"எங்கும் போகவில்லையே? உங்களிடந்தான் இருந்தது."

"அடி கள்ளி! ஏனடி பொய் சொல்லுகிறாய்? உண்மையில் உன் மனம் இவ்விடத்தில் இல்லவே இல்லை! எங்கே இருக்கிறது என்று நான் சொல்லட்டுமா?"

"தெரிந்தால் சொல்லுங்களேன்!" "நன்றாகத் தெரியும். ஈழநாட்டுப் போர்க்களத்துக்குப் போயிருக்கிறது. அங்கே என் தம்பி, ஒரு கபடமற்ற பிள்ளை இருக்கிறானே, அவனை இன்னும் என்ன பொடி போட்டு மயக்கலாம் என்று உன் மனம் யோசித்துக் கொண்டிருக்கிறது!"

"நீங்கள் கூறியதில் ஒரு பாதி உண்மை தான், அக்கா! என் மனம் ஈழ நாட்டுக்குத் தான் அடிக்கடி போய் விடுகிறது. ஆனால் அவரைப் பொடி போட்டு மயக்குவதைப் பற்றி யோசிக்கவில்லை. அவர் போர்க்களத்தில் எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறாரோ, அவருடைய திருமேனியில் எத்தனை காயம் பட்டிருக்கிறதோ, அவர் எங்கே படுத்துக் கொள்கிறாரோ, என்ன உணவு சாப்பிடுகிறாரோ என்றெல்லாம் எண்ணமிடுகிறது. அவர் அப்படியெல்லாம் அங்கே கஷ்டப்பட்டுக் கொண்டிருக்க, இங்கே நான் சுகமாக உண்டு உடுத்துப் பஞ்சணை மெத்தையில் படுத்துத் தூங்குவதை நினைக்கும் போது வேதனையாயிருக்கிறது. எனக்கு மட்டும் இறகுகள் இருந்தால், இந்த நிமிஷமே இலங்கைக்குப் பறந்து போய் விடுவேன்.!"

"பறந்து போய் என்ன செய்வாய்? அவனுக்கு மேலும் உபத்திரவந்தானே செய்வாய்?"

"ஒரு நாளும் இல்லை. அர்ச்சுனனுக்குச் சுபத்திரையும் கிருஷ்ணனுக்குச் சத்தியபாமாவும் ரதம் ஓட்டியது போல் நானும் ஓட்டுவேன். அவர் பேரில் எய்யும் அம்புகளை என் மார்பில் நான் தாங்கிக் கொள்வேன்."

"நீ தாங்கிக் கொண்டால் அதை அவன் பார்த்துக் கொண்டிருப்பானா?"

"அது அவருக்கு இஷ்டமில்லாவிட்டால் பாசறையில் காத்திருப்பேன். போர்க்களத்திலிருந்து அவர் திரும்பி வந்ததும் காயங்களுக்கு மருந்து போட்டுக் கட்டுவேன். மலர்ப் படுக்கை விரித்து வைத்திருப்பேன். அறுசுவை உண்டி சமைத்து வைத்திருந்து அளிப்பேன். உடல் வலியை மறப்பதற்கு வீணை மீட்டிப் பாட்டுப் பாடித் தூங்கப் பண்ணுவேன்."

"இதெல்லாம் நடவாத காரியங்கள், வானதி! சோழ குலத்து வீரர்கள் போர்க்களங்களுக்குப் பெண்களை அழைத்துப் போவதில்லை."

"ஏன் அக்கா, அப்படி?"

"அவர்களுக்குப் புண்களைப் பற்றிப் பயமில்லை அதைக் காட்டிலும் பெண்களைப் பற்றித்தான் அதிக பயம்!" "அது ஏன்? பெண்கள் அவர்களை என்ன செய்து விடுவார்கள்?" "அவர்களை ஒன்றும் செய்ய மாட்டார்கள்.

ஆனால் உன்னைப் போன்ற பெண்கள் போர்க்களத்துக்குப் போனால் எதிரிப் படை வீரர்கள் உங்களுடைய அழகைக் கண்டு மயங்கி வந்து சரணாகதி அடைந்து விட்டால் என்ன செய்கிறது?

அப்போது நம் சோழ நாட்டு வீரர்கள் தங்களுடைய வீரத்தைக் காட்ட முடியாதல்லவா? பெண்களைக் கொண்டு வெற்றியடைந்தார்கள் என்ற புகழைச் சோழ குலத்தார் விரும்புவதில்லை."

"அப்படிக் கூட உண்டா? எதிரி வீரர்கள் அவ்வளவு மூடர்களாயிருந்து விடுவார்களா? பெண்களின் அழகைக் கண்டு மயங்கி விடுவதற்கு?"

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## முட்டாள் கழுதையும் தந்திர நரியும்



ஒரு காட்டுல ஒரு நரியும் கழுதையும் ரொம்ப நல்ல நண்பர்களா இருந்துச்சுங்க. ரெண்டும் ஒண்ணா சேந்தே உணவு தேடி காட்டுக்குள்ள போகும் ஏதாவது ஆபத்து வந்துச்சுன்னா ரெண்டு பேரும் ஒருத்தர ஒருத்தர் காப்பாத்தணும்னு அத்துரண்களுக்குள்ள ஒரு ஒப்பந்தம் இருந்துச்சு.

ஒரு நாள் காட்டோட உள் பகுதிக்கு உணவு தேடி போச்சு நரிஅப்ப அங்க திடீர்னு ஒரு சிங்கம் வந்துடுச்சு.சிங்கத்த பாத்து பயந்த நரி சுதாரிக்கிறதுக்கு முன்னாடி சிங்கம் அத பிடிச்சிடுச்சு ரொம்ப பயந்து போன நரி தன்னோட உயிர காப்பாத்திக்கிட நினைச்சது, உடனே அது சொல்லுச்சு சிங்க ராஜாவே சிங்க ராஜாவே எனக்கு ஒரு உதவி பண்ணுங்க.

என்ன நீங்க சாப்பிடாம விட்டுடீங்கன்னா உங்களுக்கு ஒரு கொழுத்த கழுதைய சாப்பிடுறதுக்கு கொண்டு வரேன்னு சொல்லுச்சு

நரிய சாப்பிட்டா இன்னைக்கு மட்டும் பசி யாறலாம் அதே நேரத் துல கழுதைய சாப்பிட்டா ஒரு வாரம் சாப்பிடலாம்னு நினைச்ச சிங் கம் அது எப்படி நீ சொன்னா கழுத இங்க வரும்னு கேட்டுச்சு அதுக்கு நரி சொல்லுச்சு அந்த கொழுத்த கழுத என்னோட நண்பன் தான் நான் கூப்பிட்டா எங்க வேணும்னாலும் வரும்னு சொல்லுச்சு இத கேட்ட சிங்கம் அந்த நரிய போக விட்டுச்சு.

தன்னோட இருப்பிடத்துக்கு போன நரி தன்னோட நண்பனான கழுதைய கூட்டிகிட்டு திரும்ப அங்க வந்துச்சு மறைஞ்சிருந்த சிங்கம் அந்த கழுதைய பிடிச்சி அடிச்சிடுச்சு, அதுக்கு அப்புறமா ஓரமா நின்னுகிட்டு இருந்த நரிய தாவி பிடிச்சது அடடா சிங்க ராஜாவே நான் சொன்ன மாதிரியே கழுதைய கொண்டு வந்து விட்டுட்டனே என்ன எதுக்கு மறுபடியும் பிடிக்கிறீங்கன்னு கேட்டுச்சு அதுக்கு சிங்க ராஜா சொல்லுச்சு உன்னோட உயிரை காப்பாத்துறதுக்கு உன் கூட இருக்குற நண்பனையே பலி கொடுக்க துணிஞ்சு உனக்கு இந்த தண்டன சரிதான் உன்ன எல்லாம் நம்ப முடியாது,

மறுபடியும் உனக்கு ஆபத்து வந்துச் சுனா நீ என்னையும் காட்டி கொடுத்துடுவ அதனால இன்னைக்கே ஒண்ண கொள்ள முடிவு பண்ணிட்டேன்னு சொல்லி ஒரே அடி அடிச்சது சிங்கம்.

நீதி :- கெட்ட நண்பர்கள் தீமையையே பரிசாக வழங்குவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெரமுன பரிந்துரைத்தவர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்க முடியாது

## ஜனாதிபதி ரணில் அறிவிப்பு

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன முன்னணியினால் பரிந்துரை செய்த உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்க முடியாது என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்துள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு அமைச்சுப் பதவி வழங்குமாறு கோரி ஜனாதிபதிக்கு பரிந்துரை பட்டியலொன்று அனுப்பி வைக்கப்பட்டிருந்தது.

இந்த சிரேஷ்ட உறுப்பினர்களுக்கு தற்போதைக்கு அமைச்சுப் பதவி வழங்கப்பட முடியாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தொடர்பில் அதிகாரபூர்வமாகவும் பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு தனிப்பட்ட ரீதியிலும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சுப் பதவி வழங்கப்பட முடியாவிட்டாலும் அரசியலை முன்னெடுத்துச் செல்வதற்கு தேவையான வசதிகளை வழங்க முடியும் என் ஜனாதிபதி தரப்பிலிருந்து அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# பொலிஸார் சூடு ஒருவர் படுகாயம்

(காலி)

காலி கராபிட்டிய வைத்தியசாலைக்கு அருகில் மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவரை பொலிஸார் சோதனையிட சென்ற போது அவர்கள் பொலிஸாருடன் முரண்பட்டதால் துப்பாக்கிச் சூடு இடம்பெற்றுள்ளது.

குறித்த சம்பவத்தில் நபரொருவர் படுகாயமடைந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

அக்மீமன பிரதேசத்தில் வசிக்கும் 21 வயதுடைய இளைஞர் ஒருவரே துப்பாக்கிச் சூட்டில் படுகாயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் 11.30 மணியளவில் அக்மீமன பொலிஸ் போக்குவரத்து பிரிவு உத்தியோகத்தர்கள் இருவர் தெற்கு அதிவேக வீதிக்கு அருகில் அக்மீமன நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்துக் கொண்டிருந்த இருவரை நிறுத்தியுள்ளனர்.

பின்னர் பொலிஸ் உத்தியோகத்தர்களை மீறி மோட்டார் சைக்கிளை ஸ்டார்ட் செய்துவிட்டு அவர்கள் தப்பியோட முற்பட்டுள்ளனர்.

அப்போது பொலிஸ் உத்தியோகத்தர்கள் மோட்டார் சைக்கிளை நிறுத்த தயாரான போது, மோட்டார் சைக்கிளின் சாரதி பொலிஸ் உத்தியோகத்தர்களுடன் சண்டையிட்டுள்ளார்.

இதன்போது பொலிஸார் மீது தாக்குதல் நடத்த முயற்சி எடுக்கப்பட்டது. இதனால் துப்பாக்கிச் சூடு நடத்தியதாக பொலிஸார் தெரிவித்தனர். இதனையடுத்து மோட்டார் சைக்கிளில் வந்த மீகொட பகுதியை சேர்ந்த 18 வயதுடைய இளைஞனை பொலிஸார் கைது செய்தனர்.

காயமடைந்தவர் பின்னர் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இவர்களிடம் இருந்து வெளிநாட்டு கைக்குண்டு, ரி 56 ரக துப்பாக்கி, 105 ரவைகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7).

# 69 வயதுடைய நபர் வெட்டிப் படுகொலை

தெஹிவளையில் தனிப்பட்ட தகராறு காரணமாக 69 வயதுடைய ஒருவர் வெட்டி படுகொலை செய்யப்பட்டார்.

படுகாயமடைந்த நபர் களுபோவில போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட பின்னர் உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபரை வெட்டிய சந்தேக நபர் பிரதேசத்தை விட்டு தப்பிச் சென்றுள்ளார் என்றும் மேலதிக விசாரணைகள் இடம்பெறுவதாகவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை செவ்வாய்க்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** ஒமினி அலுமினியம் தொழிற்சாலை-கரந்தன், அரசகேசரி பிள்ளையார் கோவிலடி-நீர்வேலி, கரந்தன், மாலைவைரபி கோவிலடி, போயிட்டி, பொக்கணை, ஊரெழு அம்மன் கோவில் ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** ஆசிக்குளம், மகாறம்பைக்குளம், சமயபுரம், போகஸ்வேவா, நாமல்கம ஆகிய இடங்களிலும் **மன்னார் பிரதேசத்தில்** மன்னார் நகரம்-இலங்கை மின்சார சபையடி, ஓல்லி மோட்டை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

# ஜனாதிபதி மாளிகை, அலரி மாளிகை

## ஜயவர்த்தனபுரவுக்கு மாற்றத் தீர்மானம்

(கொழும்பு)

இலங்கையின் ஜனாதிபதி மாளிகை செயலகம் மற்றும் பிரதமரின் உத்தியோகபூர்வ வாசஸ்தலமான அலரிமாளிகையை கொழும்பின் புறநகரான ஸ்ரீ ஜயவர்தனபுரவுக்கு மாற்றத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து தற்போதைய ஜனாதிபதி மாளிகை செயலகம், பிரதமரின் அலரி மாளிகை மற்றும் பிரதமர் அலுவலகம் என்பன சுற்றுலா தளங்களாக பராமரிக்கப்படவுள்ளன்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பேரில் ஸ்ரீ ஜயவர்தனபுர கோட்டை பிரதேசத்தில் ஒரே இடத்தில் நிர்வாக வளாகத்தை அமைப்பதற்கு மாற்று காணியை தேடி வருவதாக நகர அபிவிருத்தி அதிகாரசபையின் பணிப்பாளர் பிரசாத் ரணவீர தெரிவித்துள்ளார்.

இடம் அடையாளம் காணப்பட்டதன் பின்னர், கட்டிடங்களை கட்டம் கட்டமாக மாற்றுவதற்கான திட்டங்கள் வரையப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். உத்தேச புதிய கொழும்பு பாரம்பரிய நகரத் திட்டத்தின் கீழ் இந்த மாற்றங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

இந்த திட்டத்தின் கீழ் கொழும்பு நகரில் உள்ள ஏனைய கட்டிடங்கள் முதலீட்டாளர்களுக்கு குத்தகைக்கு மீண்டும் வழங்கப்பட உள்ளன.

அதன்படி, பொது அஞ்சல் நிலையம், வெளிவிவகார அமைச்சு கட்டடம், பொலிஸ் தலைமையகம், விமானப்படை தலைமையகம், கடற்படை தலைமையகம், விசும்பய, ஷ்ரவஸ்தி (பாராளுமன்ற உறுப்பினர்களின் முன்னாள் விடுதி), கஃபூர் கட்டடம், ஜாவத்தை வீதியிலுள்ள நீர்ப்பாசன திணைக்கள கட்டடம், வெலிக்கடை சிறைச்சாலைகள் மற்றும் காலி முகத்திடலில் உள்ள பழைய பாதுகாப்பு அமைச்சு கட்டடம் குத்தகைக்கு வழங்கப்படுவதற்காக அடையாளம் காணப்பட்டுள்ளன.

எனினும் இந்த குத்தகையின்போது முதலீட்டாளர்கள் அசல் கட்டட அமைப்பை தொடர்ந்தும் பேணவேண்டும் என்ற நிபந்தனை விதிக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# 275 கடவுச்சீட்டுக்களை வைத்திருந்தவர் கைது

(கண்டி)

தென் கொரியாவில் வேலை வாய்ப்பு பெற்றுத் தருவதாகக் கூறி நாட்டின் பல பாகங்களிலும் உள்ள நபர்களிடமிருந்து,

275 கடவுச்சீட்டுகளைச் சேகரித்து தன்வசம் வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி, கெட்டம்பே தங்கொல்ல வீதியில் உள்ள வெளிநாட்டு வேலை வாய்ப்பு காரியாலயத்தை சுற்றிவளைத்த போதே, இந்த கடவுச்சீட்டுகள் மீட்கப்பட்டுள்ளன.

இந்த சுற்றிவளைப்பு தேடுதலை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் விசாரணைப் பிரிவு அதிகாரிகள் மேற்கொண்டிருந்தனர்.

இந்த காரியாலயத்துக்கு ஏனைய நாடுகளுக்கு வெளிநாட்டு வேலைவாய்ப்புகளுக்காக அனுப்பிவைப்பதற்கான அனுமதி உள்ளது. எனினும்; தென் கொரியாவுக்கு அனுப்பிவைப்பதற்கான அனுமதி இல்லை என்றும் அந்த அதிகாரிகள் தெரிவித்தனர். (ம-7)

> நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனமாகும்.
> - கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# தமிழருக்குச் செய்த பாவத்துக்கு முதுமையிலேனும் பிராயச்சித்தம் தேடுங்கள்

தமிழர்களின் உரிமை மறுக்கப்பட்டால், வெளியக சுயநிர்ணயம் கோருவோம் என இரா.சம்பந்தர் தெரிவித்துள்ளார்.

அவரின் முதுமையும் இயலாமையும் கண்டு கவலை கொள்ளும் அதேநேரம் துடிப்புள்ள ஓர் அரசியல்வாதியை தமிழ் அரசியலுக்குத் தலைவராக ஆக்க முடியவில்லையே என்ற வேதனையும் இருக்கவே செய்கிறது.

எதுவாயினும் தமிழ் மக்களை ஏமாற்றுவது – அலக்குமலக்கான கதைகளைக் கூறுவதில் மட்டும் சம்பந்தர் ஐயா மிகவும் தெளிவாக இருக்கிறார் என்பதையும் இங்கு கூறித்தானாக வேண்டும்.

அதற்கு நல்ல உதாரணம், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி நடத்திய சந்திப்புத் தொடர்பில் கருத்துரைத்த இரா.சம்பந்தர்; தமிழர்களின் உரிமை மறுக்கப்பட்டால், வெளியக சுயநிர்ணயம் கோருவோம் எனக் கூறியிருப்பதாகும்.

இங்குதான் சம்பந்தர் ஐயாவின் பித்தலாட்ட அரசியல் அவரின் முதுமையையும் தாண்டி முந்தி நிற்கிறது.

ஆம், தமிழர்களின் உரிமை இன்று நேற்று மறுக்கப்பட்ட விடயமல்ல. 75 ஆண்டுகளாக தமிழ் மக்களின் உரிமை மறுக்கப்பட்டு வருகிறது.

இதுதவிர, தமிழ் மக்களின் உரிமைக்காக பல்லாயிரக்கணக்கான எம் பிள்ளைகள் தங்கள் உயிரைத் தியாகம் செய்தனர்.

அதையும் கடந்து பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் இனவாத ஆட்சியாளர்களால் கொல்லப்பட்டனர்.

நிலைமை இதுவாக இருக்கையில், இப்போதுதான் சம்பந்தர் அவர்கள் கூறுகிறார்; வெளியக சுயநிர்ணயம் கோருவோம் என்று.

அப்படியானால், இதுவரையும் அரசாங்கத்துடன் சேர்ந்து பயணித்து தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்துள்ளதை அவர் மறைமுகமாக ஒப்புக்கொள்கிறார் என்றே பொருள் கொள்ள வேண்டும்.

உண்மை. இரா.சம்பந்தர் அவர்கள் நீண்ட நெடுங்காலம் அரசியல் புலத்தில் இருந்தாராயினும் அவர் தமிழ் மக்களுக்கு விசுவாசமாக நடக்கவில்லை என்பதை அவர் உயிரோடு இருக்கும் காலத்தில் சொல்லியே ஆக வேண்டும்.

ஏனெனில் தமிழர்களைத் தான் ஏமாற்றியதை தமிழ் மக்கள் புரிந்து கொள்ளவில்லை என்று தனது இறுதிக்காலத்திலும் அவர் நினைத்துவிடக்கூடாது.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் அத்தனை தமிழ் அரசியல்வாதிகளையும் நன்கு அறிவர்.

எங்கெல்லாம் அவர்கள் விழுந்தனர் தமிழ் மக்களுக்கு ஈனம் செய்தனர் என்ற உண்மைகளையெல்லாம் நம் மக்கள் நன்கு தெரிந்து வைத்துள்ளனர்.

அதேநேரம் தமிழ் மக்களுக்கு விசுவாசமாக இருக்கின்ற தமிழ் அரசியல்வாதிகளையும் அவர்கள் அறிவர்.

ஆக, ஐ.நா மனித உரிமைகள் பேரவையில் இலங்கை அரசாங்கத்துக்குக் கால அவகாசம் கொடுக்க வேண்டும் எனக் கூறி, எங்கள் தமிழ் இனத்தின் தலையில் மண்ணைப் போட்ட இரா.சம்பந்தர் தமிழ் மக்களுக்குச் செய்த பாவத்துக்கு தனது முதுமையிலேனும் பிராயச்சித்தம் தேட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீன் பிடித்தொழில் வரலாறு

## தொகுப்பு- II

27

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்,
தவிசாளர், எல்லை நிர்ணய ஆணைக்குழு.



அடுத்து, நாம் உருவாக்கும் கான்கிரீட், ரப்பர்,டயர்கள் போன்ற பொருள்களைக் கொண்டு அமைப்பது. இந்தச் செயற்கை பவளப்பாறைகளை அமைக்கப்பயன்படும் பொருள்களைத் தேர்ந்தெடுப்பது முக்கிய பங்கு வகிக்கிறது.

தேர்ந்தெடுக்கப்படும் பொருட்களின் அடிப்படையில் மீன்களை அதிகளவில் ஈர்க்கலாம். செயற்கைபவளப் பாறைகளின் மேற்பரப்புத் தன்மை, அதன்வடிவம் , அளவு போன்றவையே இந்தப் பாறைகளின் வெற்றியை முடிவு செய்யும். மேலும், கடலில் இயற்கையாக உருவான பவளப் பாறைகளுக்கு எவ்விதக் கெடுதலும் நிகழாவண்ணம், செயற்கைப் பாறைகளை அமைக்க வேண்டும்.

செயற்கை பவளப்பாறைகளை உருவாக்கப் பயன்படும் பொருள்கள் ,எளிதில் கையாளும் தன்மை, நிலைத்து நிற்கும் தன்மை, அதிகவாழ்நாள் திறன் ஆகிய மூன்றுகாரணிகளின் அடிப்படையில் தெரிவு செய்யப்படுகின்றன.

### செயற்கை பவளப் பாறைகளின் நிறைகளும் குறைகளும்

கான்கிரீட், மரக்கட்டை, ரப்பர், டயர்போன்றவை, செயற்கை பவளப் பாறைகளை உருவாக்கப் பயன்படுகின்றன. இவ்வகைப் பொருட்களில் சிலநிறைகளும் சில குறைகளும் உள்ளன.

கான்கிரீட்:கான்கிரீட் பொருட்கள் அதிக வாழ்நாள் திறன் நீருக்குள் நிலைத்து நிற்கும் தன்மை மற்றும் எளிதில் கிடைக்கும் வகையில் உள்ளன. ஆனால், இவற்றின் எடை அதிகமாக இருப்பதால், இவற்றைச் செயற்படுத்த ஆகும் செலவு அதிகமாகும். இவ்வகைச் செயற்கைபவளப் பாறைகளை ஒரு முறை மட்டுமே பயன்படுத்த முடியும்.

மரக்கட்டைகள்; பழங்காலம் முதலே, மரப்பொருட்களை வைத்து, செயற்கை பவளப் பாறைகள்உருவாக்கும் முறை நடைமுறையில் இருந்து வருகிறது. மூங்கில்,மரங்கள், மற்றும் பனை மரக்கட்டைகள், பவளப் ப்ாறைகளைஅமைக்க உதவுகின்றன. மற்றப் பொருட்களைக் காட்டிலும் இவை எளிதில் கிடைக்கக் கூடியவை. இவற்றின் எடை குறைவாக இருப்பதால் இவற்றின் உருவாக்கும் செலவு குறையும். ஆனால், இவை நுண்ணுயிரிகளால் எளிதில் பாதிக்கப்படுவதால், நெடுநாட்களுக்கு இருக்காது. என்பது இதிலுள்ள குறையாகும்.

ரப்பர், டயர்கள்:இவை குறைந்த விலையில் எளிதாகக் கிடைக்கும். எளிதில் கையாளலாம். அதிக நாட்களுக்குப் பயன்படும். ஆனால், பிறபொருட்களைக் காட்டிலும் குறைகள் நிறைய உள்ளன. அதாவது, சுற்றுச்சூழலுக்குத் தீங்கு விளைவிக்கும் வேதிப் பொருட்கள், நச்சுப்பொருட்களை உருவாக்கும். மேலும் நீரினுள் நிலைத்து நிற்கும் தன்மை குறைவாகும்.

இயற்கைபவளப்பாறைகளைக் காட்டிலும் செயற்கை பவளப் பாறைகள் மீன்களை அதிகளவில் ஈர்க்கும். இயற்கைபவளப் ப்ாறைகளைப் போலவே மீன்களின் உணவிடமாக, வாழ்விடமாக, இன விருத்தித் தளமாகப் பயன்படும். கடல்வாழ் உயிர்களைப் பாதுகாத்து, அவற்றின் இருப்பிடமாகவும் இருந்து கடல் வளங்களைப் பெருக்குவதில் செயற்கை பவளப் பாறைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன.

இலங்கைகடலில்இறக்கப்படும் கைவிடப்பட்ட பேருந்துகளால் இந்தியக் கடற்பரப்பில் மாசு ஏற்படுமா?


பிரபுராவ் ஆனந்தன்அவர்களால் எழுதப்பட்டு 19 ஜூன் 2021 திகதியிடப்பட பி.பி.சி தமிழில் வந்த இச் செய்தி இங்கு மீளப் பதியிடப்படுகிறது.

மீன் உற்பத்தியை பெருக்கும் நோக்கில் கைவிடப்பட்ட பேருந்துகளை இலங்கை மீன்வளத் துறையினர் இலங்கை கடற்பரப்பில் இறக்கி வருகின்றனர். இலங்கை மீன்வள அமைச்சின் இச்செயலால் இந்தியகடற்பரப்பு மாசுபடுவதுடன், மறைமுகமாக இந்திய மீனவர்களின் மீன்பிடிதொழில் பாதிக்கப் படும்எனஇந்திய மீனவர்கள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

### கடலுக்குள் செல்லும் பேருந்து

இலங்கையில் கடல் மீன் உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கில் பயன்பாட்டில் இல்லாத கைவிடப்பட்ட பேருந்துகளை கடலில் இறக்கும் திட்டம் கடந்தஆண்டுஇலங்கை தலைநகர் கொழும்பு கடற்பகுதி யில் ஆரம்பிக்கப்பட்டது. தற்போது இந்திய இலங்கை சர்வதேச கடல்எல்லையில் இருந்து 5நாட்டிக்கல் தூரத்தில் கச்சத்தீவு முதல் நெடுந்தீவு வரையிலான கடலில் பேருந்து கூடுகள் இலங்கை கடற்படையின் உதவியுடன் போடப்பட்டுவருகிறது.

இதற்காக இலங்கை கொழும்பில் இருந்து மீன்வளத்துறை உயர் அதிகாரிகள் அடங்கிய குழு மற்றும்


இலங்கை கடலில் இறக்கப்பட்ட கைவிடப்பட்ட பேருந்துகள்

யாழ்பாணம் மீன் வளத்துறை அதிகாரிகள் யாழ்ப்பாணம் மாவட்டம் காங்கேசன் துறை துறைமுகத்தில் இருந்து இலங்கை போக்குவரத்து துறையால் கைவிடப்பட்ட40 பேருந்துகளைகப்பலில்ஏற்றிகொண்டு இந்திய இலங்கை இடையே உள்ள சர்வதேச கடல்எல்லை வரை செல்கின்றனர்.

ஒருநாளைக்கு நான்கு பேருந்துகளை மட்டுமே கடலில் இறக்கமுடியும் என்பதால் பத்து நாட்களில் இந்த 40 பேருந்துகளையும் கடலில் இறக்கதிட்டமிட்டு கடந்த 12 ஆம் திகதி முதல் இலங்கைக் கடல்பகுதியானநெடுந்தீவு, நயினாதீவு, கச்சத்தீவு பகுதிகளில்இலங்கைக்கடற்படையின் பாதுகாப்புடன் இந்த பணிகள்நடை பெற்றுவருகின்றன. இந்த தீவுகள் அனைத்தும் இலங்கை கடற்பரப்பிற்குள் இருந்தாலும் இந்திய கடல்எல்லைக்கு அருகாமையில் உள்ளது.

இவ்வாறுபயன்பாட்டில்இல்லாமல் கைவிடப்பட்ட இலங்கை போக்குவரத்துறைக்கு சொந்தமான பேருந்துகளை கடலில் இறக்கிவிடுவதன் மூலம் மீன் இனங்களின் இனப் பெருக்கத்திற்கு ஏதுவான சூழல் உருவாகி, வடக்கு கடலில் கடலுணவு வளம் அதிகரிக்கும் என இலங்கை மீன்வள அமைச்சு தெரி வித்துள்ளது.

### ரயில் பெட்டிகளை கடலில் இறக்க திட்டம்

இந்த திட்டம் குறித்து இலங்கை மீன்வளத்துறை அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா பி.பி.சி தமிழிடம் பேசுகையில், "கடல்வாழ் உயிரினங்களின் உற்பத்தியை அதிகரிக்க அமெரிக்கா, ஜப்பான், கனடா, இந்தியா உட்பட பலநாடுகளில் செயற்கை பவளப்பாறைகள் கடலில் போடப்படுகின்றன.

அந்த வகையில்தான் இலங்கை மீன்பிடி அமைச்சகம் சார்பில் இலங்கைக் கடற் பரப்பிற்குள் இவ் வாறு பேருந்துகளை இறக்கி வைத்து அதனை செயற்கை பவளப்பாறைகளாக மாற்றி வருகிறோம். இதுதவறான செயல் ஒன்றும் இல்லை.

இலங்கையை பொறுத்தவரை இதுபுதிய முறையும் அல்ல, காரணம் மன்னார்பகுதிகளில் வசிக்கும் மீனவர்கள் அவர்களுடைய பழைய பஸ்,கார், டிராக்டர் போன்றவற்றைகடலில் போட்டு அதன் மூலம்கடல் வாழ்உயிரினங்களின் எண்ணிக்கையை உயர்த்தி மீன் பிடிதொழில் செய்து நல்ல வருமானம்ஈட்டிவருகின்றனர்.

இந்த திட்டம் இலங்கை அரசின் முழு அனுமதியுடன் நடைபெற்று வருகிறது. முன்னதாக திரிகோணமலையில் இலங்கை அரசு போக்குவரத்துக் கழகத்தால் கைவிடப்பட்ட பேருந்துகள்கடலில் இறக்கப்பட்டுள்ளன.

அதுமட்டுமில்லாமல் இலங்கை அமைச்சரவை கூட்டத்தில் இலங்கையில் கைவிடப்பட்ட ரயில்களை கொடுங்கள் நாங்கள் அதனை கடலில்இறக்கி பவளப்பாறைகளாக மாற்றுகிறோம் என கேட்டுள்ளேன். அதற்கு அமைச்சரவையில்நல்ல பதில்கிடைத்துள்ளது எனவே விரைவில் அதற்கான அனுமதியும் இலங்கை ரயில்வே துறையில் இருந்துவரும் என எதிர்பார்த்து காத்திருக்கிறோம்" என்றுகூறுகிறார் டக்ளஸ் தேவானந்தா.

### இந்திய மீனவர்களுக்கும் பலன் உண்டு

இலங்கை கடற்பரப்பில் போடப்படும் இந்த கைவிடப்பட்ட பேருந்துகள் கடல்நீரோட்டத்தின் காரணமாக இந்திய கடற்பரப்பிற்குள்வந்தால் இந்திய கடற்பரப்பு மாசுபடும் என இந்திய மீனவர்களின் குற்றச்சாட்டுக்கு பதில் அளித்த டக்ளஸ் தேவானந்தா, இந்த திட்டத்ததால் கடல்வளம் அழிய சாத்தியம்இல்லை.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## லண்டன்...

லண்டன் மற்றும் பிரான்ஸ் ஆகிய நாடுகளுக்கு உத்தியோகபூர்வ விஜய மொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்த விஜயத்தின்போது, ஜனாதிபதி பரிஸ் கிளப் உறுப்பினர்களை சந்திக்க திட்டமிட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் கடன் நெருக்கடிக்கான தீர்வு மற்றும் கடன் ஸ்திரத்தன்மைக்கு ஆதரவளிப்பதாக பரிஸ் கிளப் முன்னதாக அறிவித்திருந்தது.

இந்தநிலையில், இந்த விஜயத்தின் போது இலங்கையின் எதிர்கால கடன் மறுசீரமைப்பு பணிகள் குறித்தும் ஜனாதிபதி கலந்துரையாடவுள்ளதாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (ம-7)

## அவுஸ்திரேலியா...

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் பைனலில் அவுஸ்திரேலிய அணி வாகை சூடியது.

இறுதிப் போட்டியில் இந்திய அணியை 209 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டியில் முதல் இன்னிங்ஸுக்காக அவுஸ்திரேலிய அணி 469 ஓட்டங்களையும் இந்திய அணி 296 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டன.

173 ஓட்டங்கள் முன்னிலையுடன் தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த அவுஸ்திரேலிய அணி 8 விக்கெட்டுக்களை இழந்து 270 ஓட்டங்களை எடுத்திருந்தபோது ஆட்டத்தை இடைநிறுத்தி இந்திய அணிக்கு 444 ஓட்டங்களை வெற்றியிலக்காக நிர்ணயித்தது.

இதன்படி தனது இரண்டாம் இன்னிங்ஸை ஆரம்பித்த இந்திய அணி நேற்று முன்தினம் 4ஆம் நாள் ஆட்டம் நிறைவுக்கு வந்தபோது 3 விக்கெட்டுக்களை இழந்து 164 ஓட்டங்களை எடுத்திருந்தது.

நேற்றைய 5ஆம் நாளாட்டத்தை தொடர்ந்த இந்திய அணி அடுத்தடுத்து விக்கெட்டுக்களை பறிகொடுத்து 234 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

இதனால் 209 ஓட்டங்களினால் வெற்றி பெற்ற அவுஸ்திரேலிய அணி உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் மகுடத்தை தட்டிச்சென்றது. (ம-7)

## ரூ.5 ஆயிரத்...

கொண்டு வரப்பட்ட 22,500 மெற்றிக் டன் யூரியா உரத்தை பகிர்ந்தளிப்பது தொடர்பிலும் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர சுட்டிக் காட்டியுள்ளார்.

அத்துடன் எதிர்வரும் 15ஆம் திகதி முதல் யூரியா உர மூடை ஒன்றின் விலையை 9 ஆயிரம் ரூபாய் வரை குறைப்பதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ம-7)

## லொறியிலிருந்து...

கம் இரவீந்திரன் என்பவராவார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை நான்காம் திகதி பிற்பகல் ஆரியகுளம் சந்திக்கு அருகில் உள்ள மாமரம் ஒன்றின் மாங்காய்களை லொறியில் ஏறி நின்றவாறு பறிக்க முற்பட்டபோது தவறிவிழுந்திருந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

இந் நிலையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் மரண விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## அதிர்ஷ்ட...

தகவல்கள் வெளியாகியுள்ளன.

எதிர்வரும் ஜூலை மாதம் முதலாம் திகதி முதல் லொத்தர் சீட்டு ஒன்றின் விலையை 40 ரூபாயாக அதிகரிக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்து வருவதாக அகில இலங்கை லொத்தர் விநியோகஸ்தர்கள் சங்கத்தின் தலைவர் கிரிஷாந்த மரம்பகே தெரிவித்தார்.

அதன்படி, இருபது ரூபாய்க்கு விற்பனைச் செய்யப்படும் அதிர்ஷ்ட இலாபச் சீட்டின் விலை இரட்டிப்பாகும். அதனை, தேசிய லொத்தர் சபை மற்றும் அபிவிருத்தி லொத்தர் சபை உறுதிப்படுத்தியுள்ளன.

இந்த விலை அதிகரிப்புக்கு நிதி அமைச்சு ஒப்புதல் அளித்துள்ளதாக அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன. (ம-7)

## உணவு...

சுமார் 88 வீதமான மக்கள் உணவு பாதுகாப்பற்ற நிலையை எதிர்கொண்டுள்ளதாக பேராசிரியர் வசந்த அத்துகோரல குறிப்பிட்டுள்ளார்.

2019ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில் இந்த நாட்டில் உணவுப் பாதுகாப்பு வீழ்ச்சியடைந்துள்ளதாக பேராசிரியர் வசந்த அத்துகோரல மேலும் தெரிவித்துள்ளார். (ம-7)

## 40 நாட்கள்...

னாஸ் மாகாணத்தில் உள்ள அரராகுவாராவிற்கும் குவேரியார் மாகாணத்தில் உள்ள சான் ஜோஸ் டெல் குவேரியார் நகருக்கும் இடையே ஏழு பேரை ஏற்றிச் சென்றபோது, மே 1 அதிகாலை இயந்திரக் கோளாறு காரணமாக அடர்ந்த காட்டில் விழுந்து நொருங்கியது.

விமானி மற்றும் குழந்தைகளின் தாய் உட்பட மூன்று பெரியவர்கள் விபத்தில் உயிரிழந்ததுடன் அவர்களின் உடல்கள் விமானத்திற்குள் கண்டெடுக்கப்பட்டன.

அவர்களுடன் பயணம் செய்த 3, 3, 9 வயது மற்றும் 12 மாத குழந்தையும் விபத்திலிருந்து தப்பித்து 40 நாட்கள் கடந்த நிலையில் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர்.

இவர்கள்மருத்துவச் சிகிச்சைக்காக தலைநகர் பொகோட்டாவில் உள்ள மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

காட்டு விலங்குகளால் இவர்கள் கொல்லப்பட்டிருக்கலாம் என நம்பப்பட்ட நிலையில் இவர்கள் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். (ம-7)

## அரசு...

கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் குறிப்பிடுகையில்,

நாடு விரைவில் அபிவிருத்தியடைய வேண்டுமெனில் ஊழல், மோசடிக்கு எதிரான சட்டமூலம் அவசியமாகும். இது தொடர்பான சட்ட மூலம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும் என்று அரசாங்கம் தெரிவித்துள்ளது.

ஆனால் அது அரசாங்கத்துக்கு சார்பாகவே தயாரிக்கப்படவுள்ளது.

உண்மையில் நாட்டில் ஊழல் மோசடிகள் ஒழிக்கப்பட வேண்டுமெனில் ஐக்கிய நாடுகள் சபையுடன் செய்து கொள்ளப்பட்டுள்ள ஒப்பந்தத்துக்கு சமாந்தரமான சட்டமூலம் உருவாக்கப்பட வேண்டும். அவ்வாறான சட்டமே பலம்மிக்கதாகக் காணப்படும்.

அத்தோடு பொலிஸாரால் மாத்திரம் ஊழல், மோசடிக்கு எதிரான நடவடிக்கைகளை முன்னெடுக்க முடியாது.

எனவே இது தொடர்பான நடவடிக்கைகளில் சட்டத்தரணிகள், வங்கி அதிகாரிகள் உள்ளிட்ட துறைசார் நிபுணர்களும் உள்வாங்கப்பட வேண்டும்.

மோசடியில் ஈடுபடுபவர்களுக்கு மோசடி செய்யப்படும் தொகைக்கு சமாந்தரமான தண்டப்பணம் அறவிடப்பட வேண்டும் என்பதோடு, 10 வருட சிறை தண்டனையும் வழங்கப்பட வேண்டும். முறையான சட்ட மூலம், அறிமுகப்படுத்தப்பட்டு அது உடனடியாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்றார். (ம-7)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378, 076 097 3127

ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 11/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1597
வெற்றி இலக்கங்கள்
மீனம் 4 7 9 5 3 7
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 2023.06.11
சீட்டிழுப்பு இலக்கம் - 1172
V 14 30 37 63
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்

கொவிசெத
திகதி 2023.06.11
சீட்டிழுப்பு இலக்கம் 3384
ஆங்கில எழுத்து / வெற்றி இலக்கங்கள்
D 37 47 53 54
தேசிய லொத்தர் சபை

மெகா பவர்
திகதி 11/06/2023
சீட்டிழுப்பு இலக்கம் 1490
வெற்றி எழுத்து / சுப்பர் இலக்கம் / வெற்றி இலக்கங்கள்
A 24 03 29 61 65

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.11
சீட்டிழுப்பு இலக்கம் 451
வெற்றி இலக்கங்கள்
ரிஷபம் 11 34 42 62 ரிஷபம்
தேசிய லொத்தர் சபை

மஹஜன சம்பத
திகதி 2023/06/11
சீட்டிழுப்பு இலக்கம் 5142
ஆங்கில எழுத்து / வெல்லப்பட்ட இலக்கங்கள்
W 5 2 2 4 3 7
தேசிய லொத்தர் சபை

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2116
நிறம் செம்மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி 2023.06.11
தினம் ஞாயிற்றுக்கிழமை
B 21 32 56 61
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,892,700/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

சனிதா Shanida
ஞாயிற்றுக்கிழமை
சீட்டிழுப்பு திகதி 2023.06.11
வெற்றி வாரம்: 4277
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.49,845,064.20
வெற்றி இலக்கங்கள்
08 15 30 68 G
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

சசிரி
வெற்றி வாரம் 335
சீட்டிழுப்பு திகதி 2023.06.11
வெற்றி இலக்கங்கள் 02 04 22
கபிலம்
14
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 2,563,680/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

ராசி
சுப்பர் ஜக்பொட் ரூ. 2,398,546.20
திகதி 2023-06-11
வெற்றி வாரம் 3828
வர்ணம் ஊதா
வெற்றி இலக்கங்கள் 04 16 43 58
சிம்மம்
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 8,469,240/-
DLB அபிவிருத்தி லொத்தர் சபை

ஜயோதா
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
E 19 19 36 69 72
சுப்பர் இலக்கம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 336,931,432.20
1292
மஞ்சள்
2023.06.11
ஞாயிறு
DLB DEVELOPMENT LOTTERIES
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.

அட கோடிபதி ADA KOTIPATHI
ஞாயிற்றுக்கிழமை
வெற்றி வாரம்: 1942
வர்ணம்: இளம் பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2023.06.11
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ.51,846,707.80
வெற்றி இலக்கங்கள் 01 04 05 75
ஆங்கில எழுத்து D
DLB அபிவிருத்தி லொத்தர் சபை


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத்தருகின்றோம்

## ஆகாஸ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை வல்வெட்டித்துறை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வ்வுனியா, மன்னார் ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தைத் தந்து வாங்கப்படும். (15931)

076 825 7716 (ஆகாஸ்)

## வேலையாள் தேவை

நெல்லியடியில் இயங்கி வரும் பல் சிகிச்சை நிலையத்திற்கு பெண் வரவேற்பாளர் தேவை.
அருகில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது

(C-6721) 021 226 0000

## நாராயண தைலம்

சகலவிதமான நரம்புகள் தொடர்பான நோய்கள், பாரிசவாதம் மற்றும் குருதிச்சுற்றோட்டத்தினை சீர்செய்வதற்கும் கடுமையான நோவுக்கும் பயன்படுத்தலாம்.

நாராயண தைலம் NARAYANA THILAM (C-6720)

MANUFACTURED BY :
SRILANKA AYURVEDIC DRUGS CORPORATION

சந்தைப்படுத்துவோர் :
சிவா நறுமணப் பூங்கா
288, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
T.P : 021 222 2567

## காணி விற்பனைக்கு

சிறுப்பிட்டி மேற்கில் நீர்வேலி இராச வீதிக்கு அண்மையில் 5 1/2 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு (15920)

077 842 5421,077 948 4978


# வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை பணியாளர்களால்

## 480 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மே மாதம் நாட்டுக்கு அனுப்பி வைப்பு

(கொழும்பு)

கடந்த மே மாதத்தில் வெளிநாடுகளில் பணிபுரியும் இலங்கை ஊழியர்கள் அனுப்பிய பணத்தொகையின் பெறுமதி 480 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியுள்ளதாக தொழிலாளர் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்தார்.

கடந்த வருடம் மே மாதம் வரையான காலப்பகுதியினுள் மொத்த வெளிநாட்டு பணவனுப்பல் 1.335 பில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவாகியிருந்தது.

எனினும், இந்த ஆண்டில் மே மாதம் வரையில் வெளிநாட்டு தொழிலாளர்களால் 2.347 பில்லியன் அமெரிக்க டொலர்கள் பணம் அனுப்பப்பட்டுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

நெருக்கடிக்கு முந்தைய நிலைகளை அடைவதற்கு மேலும் 150 மில்லியன் அமெரிக்க டொலர்கள் மாதாந்தம் பணம் அனுப்பப்பட வேண்டும் என அமைச்சர் தெரிவித்தார்.

இலங்கையை உயர் திறன் ஏற்றுமதி மையமாக மாற்றும் நோக்கில் அரசாங்கம் செயற்பட்டு வருவதாக அவர் மேலும் தெரிவித்தார். (ம-7)

## பழைமை...

வீதத்தை கடந்து செல்ல முடியாது. எனவே, எந்தவொரு கட்சியும் பெரும்பான்மையை பெற்று வெற்றி பெறுவது என்பது சாத்தியப்படாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

அடுத்த வருடம் மார்ச் மாதத்துக்குள் ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான முனைப்புடன் அரசாங்கம் செயற்பட்டு வரும் நிலையில், ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற தேர்தலில் எந்தவொரு கட்சியாலும் 50 வீதத்தை கடந்து பெரும்பான்மையை பெற்றுவிட முடியாது என்று குறிப்பிட்டுள்ளார்.

ஜனாதிபதியின் இந்த கருத்து தொடர்பில் எதிர்க்கட்சிகள் பல கடும் விமர்சனங்களை முன்வைத்த நிலையில், ஐக்கிய தேசிய கட்சியின் செயற்குழு உறுப்பினர்கள் ஜனாதிபதியை சந்தித்து கலந்துரையாடினர். இதன்போதே மேற்கண்டவாறு தெரிவிக்கப்பட்டது.

அங்கு அவர் தொடர்ந்தும் தெளிவுபடுத்துகையில்,1977ஆம் ஆண்டுக்கு பின்னர் இது வரையில் பாராளுமன்ற தேர்தலில் எந்தவொரு தரப்புக்கும் 51 வீதத்தை கடந்து மக்கள் ஆதரவினை பெற்றுக்கொள்ள முடியாமல் போனது. ஜே.ஆர். ஜயவர்தன கூட ஆறில் ஐந்தை பெற்று விடுவோம் என்று நம்பியிருக்கவில்லை. எவ்வாறாயினும், அன்றிலிருந்து இன்று வரை எந்தவொரு தரப்புக்கும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை பாராளுமன்ற தேர்தலில் கிடைக்கவில்லை. ஏனைய கட்சிகளின் ஆதரவை பெற்றே ஆட்சியை அமைக்க முடிந்தது.

இதன் அடிப்படையில் நோக்கும்போது அதிகாரம் அல்லது செல்வாக்கு இன்று யாருக்கு உள்ளது என்பதை யாராலும் கணிக்க இயலாது. ஐக்கிய மக்கள் சக்திக்கோ, மக்கள் விடுதலை முன்னணிக்கோ அல்லது பொதுஜன பெரமுனவுக்கோ 50 வீதத்தை கடந்த அதிகாரமோ மக்கள் செல்வாக்கோ இருக்கும் என கூற இயலாது.

நாட்டின் இன்றைய உண்மையான நிலை இதுவாகும். பாராளுமன்றத்தை பிரதிநிதித்துவம் செய்யும் அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்தால் கூட தேர்தலில் 50 வீதத்தை கடந்து வாக்குகளை பெறுவது என்பது சாத்தியமில்லை.

எனவே, வழமை போல் சிந்தித்து செயற்படுவதால் மக்கள் ஆதரவை பெற்றுக்கொள்வதோ தேர்தலில் வெற்றி பெறுவதோ யாருக்கும் சாத்தியமில்லை. ஆகவே, ஐக்கிய தேசிய கட்சியை பலப்படுத்தும் நடவடிக்கைகளை முன்னெடுங்கள் என்று தெரிவித்தார்.

(ம-7)


## KBK கணக்கீட்டுக் கல்லூரி

கந்தர்மடம் கொழும்புத்துறை

வர்த்தகப் பிரிவுக்கான பிரத்தியேக மற்றும் குழு வகுப்புக்கள்

A/L 2025

ஆரம்பம் : 14.06.2023 புதன் மாலை 04 மணி


கணக்கீடு : திரு.க.பா.பாலகஜன்
பொருளியல் : திரு.அ.ஆர்நோல்ட்
வணிகக்கல்வி : திரு.S.K.பாலசபேஷ்

- தனிப்பாட அனுமதி வழங்கப்படும்.
- A/L 2023, A/L 2024 பிரிவுகளுக்கான புதிய அனுமதிகள் வழங்கப்படுகின்றன.
- தரம் 10,11 இற்கான வணிகமும் கணக்கீடும் வகுப்புக்கள் நடைபெறுகின்றன.

(15855)

- 077 452 0043


# மரண அறிவித்தல்



தோற்றம் 18 - 09 - 1967

மறைவு 11 - 06 - 2023

## கனகராசா ஸ்ரீதரன்

மண்டைதீவு 6ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகவும் இந்தியாவை வசிப்பிடமாகவும் கொண்ட கனகராசா ஸ்ரீதரன் அவர்கள் 11/06/2023 அன்று காலமானார்.

இவர் காலஞ்சென்ற திரு.திருமதி கனகசுந்தரம் கனகம்மா (இளைப்பாறிய ஆசிரியர்கள்) அவர்களின் அன்புப் பேரனும் காலஞ்சென்றவர்களான கனகராசா - இரத்தினேஸ்வரி தம்பதிகளின் அன்பு மகனும் சியாமளா, முரளிதரன், சசிகலா, வக்சலா (பிரான்ஸ்), பரணிதரன் (கனடா), காலஞ்சென்ற ராதிகா ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் நேற்றையதினம் இந்தியாவில் இடம்பெற்றது.

இதனை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு அறியத் தருகின்றோம்.

இ.சியாமளா - 077 948 5557
வி.சசிகலா - 077 927 3336
க.முரளிதரன் - 077 200 2425 (15930)

தகவல்:
குடும்பத்தினர்


## VISA விண்ணப்பங்கள்

அனைத்து நாடுகளுக்குமான விசா விண்ணப்பங்கள்,ஆலோசனைகள்

✓ ONLINE APPLICATIONS
✓ VISA APPOINTMENTS
✓ PASSPORT APPLICATION
✓ POLICE CLEARANCE

என அனைத்து விதமான விசா ஏற்பாடுகளும் செய்து தரப்படும்.

STUDENT VISA • TOURIST VISA • SPOUSE VISA • SUPER VISA
கனடா ஐரோப்பா ஜெர்மனி பிரான்ஸ் லண்டன் சுவிஸ் அமெரிக்கா

Srilankan Visa Extension

(C-6722)

COLLEGE OF INTERNATIONAL MIGRATION SKILLS
49A,சப்பல் லேன், யாழ்ப்பாணம்.
V2 TRAVELS

0777-068-777

## உடனடி வேலை வாய்ப்பு

நிர்வாக உத்தியோகத்தர்

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்

V2 TRAVELS

எமது கிளைகள்
- கிளிநொச்சி
- சுன்னாகம்
- சாவகச்சேரி
- மானிப்பாய்
- நெல்லியடி
- பருத்தித்துறை
- திருகோணமலை
- வல்வெட்டித்துறை
- கோப்பாய்
- புத்தூர்
- பண்டத்தரிப்பு
- சங்கானை
- கொழும்பு

(C-6722)

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

## காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் புத்தூரில் 48 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

- பருத்தித்துறை வீதி புத்தூர் சந்தியில் இருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்
- புத்தூர் தண்ணீர் தாங்கி அருகாமை(நிலப்பரப்பு)
- மூன்று பரப்பாகவும் இரண்டரைப் பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- வியாபார நிலையங்கள், திருமண மண்டபங்கள், வீடு அமைப்பதற்கு உகந்த இடம்
- பார்வையிடும் நேரம் காலை 6 மணிமுதல் மாலை 6 மணிவரை
- நன்னீர் ஊற்று.

(15934)

076 733 6047
076 755 8606


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்ரெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுன் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.06.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org